Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்
கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk (சி-2014)
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 30 (23.01.2004) வெள்ளிக்கிழமை இதழ்:114

# தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையால் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம்

## அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சூழல் எமக்குப் புதுமையாக இல்லாவிட்டாலும் இது தமிழ்மக்கள் மத்தியில் புதிய அச்சத்தையும், நம்பிக்கையின்மையையும் தோற்றுவித்திருக்கிறது.**

**இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷியை சந்தித்த பின்னர் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -**

ஜே.வி.பி சுதந்திரக் கட்சிக் கூட்டணி என்பது துரதிஷ்டவசமானது. இவர்கள் வெளிப்படையாகவே சமாதானத்தை முன்னெடுப்பதற்கு, யுத்தநிறுத்த உடன்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் எதிரான கருத்துகளை முன்வைத்திருக்கிறார்கள்.

அவ்வாறான ஒரு சிலர் பேசியிருப்பது எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், யுத்தநிறுத்த உடன்பாட்டை நாங்கள் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கும் பல தடங்கல்கள் ஏற்படலாம் என்பதைனை நாம் அகாஷிக்குத் தெளிவாக்கியுள்ளோம்.

எங்களைப் பொறுத்தவரை அறிக்கைகளைவிட செயற்பாடுகள்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் என நினைக்கின்றேன்.

சிங்கள மக்கள் சமாதான வழியில் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆணை வழங்கியதால் நாம் அவருடன் பேசினோம்.

எதிர்காலத்திலும் சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன், முழு அதிகாரங்களுடன் இருக்கின்ற அரசியல் தலைமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## யசூஷி அகாஷி குழுவினர் தமிழ்ச்செல்வனை சந்திப்பு!

(கிளிநொச்சி)

யப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று கிளிநொச்சி சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் இரு மணிநேரம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலக துணைப்பொறுப்பாளர் செல்வி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஜப்பானிய தூதுவர் யசூஷி அகாஷி, இலங்கைக்கான யப்பானிய தூதுவர் அகியோ சுட்டா உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.



## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. உடன்பாடு; இலங்கையில் புதிய சிக்கல் தோற்றம்!

### கிளிநொச்சியில் அகாஷி கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை, இலங்கையில் பிறிதொரு சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.


இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின், கிளிநொச்சி பத்திரிகையாளர் மாநாட்டில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் பலவிடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அதில், கொழும்பின் தற்போதைய அரசியல் நிலைமை, ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ...வும் பேசினோம்.

அத்துடன், தற்போதைய கொழும்பின் அரசியல்நிலை தொடர்பாக, இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச நாடுகள் மிகுந்த கவலையடைந்திருப்பதாக தமிழ்ச்செல்வனுக்கு எடுத்துக்காட்டினேன்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஜப்பான் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில் அமுல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடினேன்.

இன்று கொழும்பில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில், கலந்துகொள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அனுப்புமாறு தமிழ்ச்...



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட ஜப்பானிய அதிகாரிகள் குழு

## கிளிநொச்சியில் அகாஷி கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை, இலங்கையில் பிறிதொரு சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின், கிளிநொச்சி பத்திரிகையாளர் மாநாட்டில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் பலவிடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அதில், கொழும்பின் தற்போதைய அரசியல் நிலைமை, ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இருவருக்கிடையேயான அரசியல் வேறுபாடுகள், தற் போதைய சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணி தொடர்பாகவும், இதன்மூலம் எதிர்கால அபிவிருத்திகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் பேசினோம்.

அத்துடன், தற்போதைய கொழும்பின் அரசியல்நிலை தொடர்பாக, இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச நாடுகள் மிகுந்த கவலையடைந்திருப்பதாக தமிழ்ச்செல்வனுக்கு எடுத்துக்காட்டினேன்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஜப்பான் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில் அமுல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடினேன்.

இன்று கொழும்பில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில், கலந்துகொள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அனுப்புமாறு தமிழ்ச்செல்வனைக் கேட்டபோது, கொழும்பில் தற்போதுள்ள அரசியல் குழப்பநிலை காரணமாக விடுதலைப் புலிகள் இதில் பங்கேற்க முடியாதெனத் தெரிவித்ததாக அகாஷி தெரிவித்தார்.

# இலங்கையில் நிலவும் அரசியல் குழப்பநிலையால் இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்பாடு தாமதம்!

தேர்தலை மையமாகக் கொண்ட இலங்கையின் தற்போதைய அரசியல்நிலையில் இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என்று, இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இது குறித்து மேலும் அந்தப் பத்திரிகை தெரிவித்ததாவது -

பாதுகாப்பு அமைச்சையும் தன்வசம் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அடுத்த மாத இறுதிக்குள் இந்த உடன்படிக்கையைச் செய்துகொள்வதில் ஆர்வம் காட்டினார்.

விரைவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த உடன்படிக்கையை சாதமாகப் பயன்படுத்தி, பிரசாரம் செய்யலாம் என்பதற்காகவே, அவர் இவ்வாறு அக்கறை காட்டிவருகிறார்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சு ஐ.தே.மு அரசாங்கத்தின் வசம் இருந்த போது, கடந்த ஒக்ரோபரில் இந்தியாவுக்குச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரசிங்க, பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றைச்செய்து கொள்வதற்கு இணக்கம் கண்டிருந்தார். இதனால், மீண்டும் பாதுகாப்பு அமைச்சு தனது கட்டுப்பாட்டில் வந்த பின்னரே இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விருப்பம் கொண்டிருக்கிறார்.

இதன் காரணமாக இந்த உடன்பாட்டில் அவசரப்பட்டுக் கைச்சாத்திடவேண்டாம் என்று, இந்தியாவிடம் கேட்டுக்கொள்ள பிரதமர் ரணில் திட்டமிட்டுள்ளார். ஆகக்குறைந்தது, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் காலம் வரையாவது இந்த உடன்பாடு கைச்சாத்திடுவதைப் பிற்போடுமாறு அவர் கேட்டுக்கொள்ளவுள்ளார்.

இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்துகொள்வதென பிரதமர் ரணில் தீர்மானித்திருந்த தருணத்தில், பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான குழுவொன்றை பேச்சுக்கள் நடத்த புதுடெல்லிக்கு அனுப்பியிருந்தார்.

இந்தக்குழு நாடு திரும்பி, இந்தியா சமர்ப்பித்த உடன்பாடு வரைபை ஜனாதிபதியிடம் கையழித்தது. இந்த வரைபை ஜனாதிபதி சந்திரிகா தற்போது ஆராய்ந்துவருகிறார்.

அடுத்த மாத இறுதியில் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திடுவதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைகளுக்கு ஏப்ரலில் தேர்தல்

(கொழும்பு)

அனைத்து மாகாணசபைகளையும் எதிர்வரும் 9 ஆம் திகதி கலைத்துவிட்டு, ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் தேர்தல் நடத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணக்கம் கண்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனோ–மலிக் குழுவினர் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

மனோ - மலிக் குழுவினருக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற இருந்த கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு இந்தக்கூட்டம் ஒத்திப் போடப்பட்டமைக்கு மனோ தித்தவெல சுகவீனம் அடைந்திருப்பதே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# 2 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியா இந்திய அணியைத் தோற்கடித்தது!



அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் சிட்னியில் நேற்று நடந்த பரபரப்பான சர்வதேச ஒருநாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி இரண்டு விக்கெட்டுக்களால் இந்திய அணியை வென்றது.

இந்திய அணித் தலைவர் கங்கூலி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று, தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். தொடக்க வீரர்களாக கங்கூலியும், பார்த்தீவ் பட்டேலும் களம் இறங்கினார்கள்.

அவுஸ்ரேலிய வீரர்களின் பந்து வீச்சினால் ஆரம்பத்தில் இந்திய விக்கெட்டுகள் சரிந்தன. 15.2 ஓவரில் 80 ஓடடங்கள் எடுப்பதற்குள் கங்கூலி ஒரு ஓட்டத்துடனும் பார்த்தீவ் பட்டேல் 28 ஓட்டங்களுடனும், டிராவிட் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நான்காவது விக்கெட்டுக்கு லக்ஷ்மனும் யுவராஜ் சிங்கும் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி விக்கெட் சரிவை தடுத்து நிறுத்தியது. இருவரும் பொறுமையாக ஆடினர். நேரம்செல்லச் செல்ல யுவராஜ் சிங் ஆட்டத்தில் அனல் பறந்தது. அவர் அவுஸ்ரேலிய பந்துவீச்சை விளாசித் தள்ளினார். அவுஸ்ரேலிய அணித்தலைவர் பொண்டிங் பந்து வீச்சை மாற்றி பார்த்தார். அதில் எந்த பலனும் இல்லாமல் போனது.

இருவரும் அபாரமாக ஆடி 'சதம்' அடித்தனர். முதலில் யுவராஜ்சிங் சதம் அடித்தார். அவர் 104 பந்துகளில் சதத்தை தொட்டார்.

பின்னர் லக்ஷ்மன் 'சதம்' அடித்தார். இந்தப் போட்டித் தொடரில் அவரது 2 ஆவது 'சதம்' இதுவாகும். கடந்த 18 ஆம் திகதி அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 'சதம்' அடித்து இருந்தார். லக்ஷ்மன் 127 பந்துகளில் சதத்தை தொட்டார்.

## விளையாட்டு

மறுமுனையில் இருந்த யுவராஜ சிங் தொடர்ந்து அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார்.

ஆட்டம் முடிய 3 பந்துகள் எஞ்சியிருந்த போது யுவராஜ்சிங் ஆட்டம் இழந்தார். அவர் 122 பந்துகளில் 16 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 139 ஓட்டங்கள் எடுத்தார். அப்போது ஓடட எண்ணிக்கை 293 ஆக இருந்தது. லக்ஷ்மன் - யவராஜ்சிங் ஜோடி 205 பந்துகளில் 213 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 296 ஓட்டங்களைக் குவித்தது. லக்ஷ்மன் 130 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 106 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

பின்னர், அவுஸ்ரேலியா களம் இறங்கியது. ஓட்ட எண்ணிக்கை 24 ஆக இருந்த போது தொடக்க ஆட்டக்காரர் ஹெட்டிச் ஆட்டம் இழந்தார். 9.2 ஓவர் வீசி முடிக்கப்பட்டபோது, அவுஸ்ரேலியா ஒரு விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் 48 ஓட்டங்களுடனும், பொண்டிங் 13 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிந்த போது மழையினால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. மழை நின்றதும் ஆட்டம் 34 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

அவுஸ்ரேலியா 34 ஓவரில் 226 ஓட்டஙகள் எடுத்தால் வெற்றி பெறும்.

ஓட்ட எண்ணிக்கை 150 இருக்கும்போது, பொண்டிங், பதான் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து களம் இறங்கிய மார்ட்டின அடுத்த பந்திலே ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அப்போது கில்கிறிஸ்ட் 91 ஓட்டங்களை எடுத்திருந்தார். இவருடன் சைமண்ட்ஸ் ஜோடி சேர்ந்தார்.

சிறப்பாக, விளையாடிய கில்கிறிஸ்ட் 95 ஓட்டங்களில் முரளி கார்த்திக் வீசிய பந்தில் அவரிடமே பிடி



கொடுத்து ஆட்டமிழந்தார். 5 ஆவது விக்கெட்டிற்கு சைமண்ட்சும், பெவனும் ஜோடி சேர்ந்தனர். சைமண்ட்ஸ் 16 ஓட்டங்களில் கங்கூலி வீசிய பநதில் ஆட்டமிழந்தார். 6 ஆவது விக்கெட்டாக கிளார்க் களம் இறங்கினார். பெவனும் 12 ஓட்டங்களில் கங்கூலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து, கிளார்க்குடன் ஹார்வி ஜோடி சேர்ந்தார் அவர் ஒருஓட்டம் எடுத்த நிலையில ரன் அவுட்டானார். பிக்கல் ஜோடி சேர்ந்தார். கிளார்க் 21 ஓட்டங்களுடன் கங்கூலியின் பந்து வீச்சில் பதானியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பிக்கலுடன் ஜோடி சேர்ந்தார் பிரட்லீ அவுஸ்ரேலிய அணி 3 பந்துகளில் 7 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் பிரட்லீ அடித்த சிக்ஸருடனும், அடுத்த ஒரு ஓட்டத்துடனும் அவுஸ்ரேலிய அணி 33.5 ஓவர்களில் தனது வெற்றி இலக்கை அடைந்தது. அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சாளர்களில் பிரட்லீ இரண்டு விக்கெட்டுக்களையும், கிலெஸ்பி, பிக்கல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்திய அணியின் பந்து வீச்சாளர்களில் பதான், கங்கூலி இருவரும் மூன்று விக்கெட்டுக்களையும், முரளி கார்த்திக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் கில்கிறிஸ்ட் விளையாடமாட்டார்!

அவுஸ்ரேலிய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கில்கிறிஸ்ட் 3 நாடுகள் போட்டியில் சிம்பாப்வேக்கு எதிராக அடுத்து நடைபெறும் இரண்டு ஆட்டங்களில் விளையாடமாட்டார் என அறிவிக்கப் பட்டது. எதிர்வரும் 26ஆம் திகதி மற்றும் 29 ஆம் திகதி நடைபெறும் போட்டிகளில் அவர் விளையாடமாட்டார். பெப்ரவரி 1 ஆம் திகதி இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கில்கிறிஸ்டுக்கு பதிலாக பிரட்ஹேடின் சேர்க்கப்பட்டுள்ளார். இதை அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# பா.ஜனதா - அ.தி.மு.க. வேட்பாளர்கள் அடுத்தமாதம் அறிமுகமாவார்கள்



(சென்னை)

தேசிய ஜனநாயக் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியதால் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க பாரதீய ஜனதா விரும்பியது.

வெங்கையா நாயுடு சி.பி.ராதா கிருஷ்ணன் உள்ளிட்ட பா.ஜனதா தலைவர்கள் அ.தி.மு.க.வுக்கு பகிரங்க அழைப்பு விடுத்தனர். ஆனாலும், அ.தி.மு.க. தரப்பில் இருந்து எவ்விதபதிலும் வராமல் இருந்தது.

இந்த நிலையில், துணைப் பிரதமர் அத்வானி நேற்று முன்தினம் முதலமைச்சர் ஜெயல்லிதாவுடன் தொலைபேசியில் பேசினார்.

இந்த பேச்சுக்கு பிறகு அ.தி.மு.க.விடம் இருந்து இரண்டு அறிவிப்புகள் வெளியானது.

அகில இந்திய பா.ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு முதலமைச்சர் ஜெயலலிதாவை வருகிற 28 ஆம் திகதி சந்திக்க வருவதாக அ.தி.மு.க. செய்தி வெளியிட்டது.

அ.தி.மு.க. பொதுக்குழு செயற்குழுக் கூட்டம் நேர்காணல் நடந்துவரும் குளப்பாக்கத்தில் பெப்ரவரி 3ஆம் திகதி நடைபெறும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து, அ.தி.மு.க. - பா.ஜனதா கூட்டணி ஏற்பாடுகள் மின்னல் வேகத்தில் நடக்கின்றன.

ஜெயலலிதாவை வெங்கையா நாயுடு சந்தித்து பேசியதும்; இரு கட்சிகள் கூட்டணி பற்றி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

அ.தி.மு.க.பொதுக் குழுவில் இரு கட்சிகளும் போட்டியிடும் தொகுதிப் பட்டியல் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க. 33 தொகுதிகளில் போட்டியிடும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே அறிவித்துள்ளார். எனவே பா.ஜனதாவுக்கு 7 தொகுதிகள் ஒதுக்கப்படலாம். என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு அ.தி.மு.கவும், பா.ஜனதாவும் வேட்பாளர்களை தேர்வு செய்து அறிவிக்கும்.

அ.தி.மு.க. - பா.ஜனதா வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் சென்னையில் நடக்கிறது.

பெப்ரவரி 10 அல்லது 13ஆம் திகதியில் இக்கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் நடப்பதாக பா.ஜனதா வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் துணைப் பிரதமர் அத்வானியும், முதலமைச்சர் ஜெயலலிதாவும் கலந்து கொண்டு ஒரே மேடையில் பேசுகிறார்கள்.

40 வேட்பாளர்களையும் மேடையில் அவர்கள் அறிமுகம் செய்து வைக்கிறார்கள்.

அதன் பிறகு இரு கட்சிகளின் தலைவர்களும் தேர்தல் பிரசாரத்தை தொடங்குகிறார்கள்.

# 7 மாநில முதலமைச்சர்களுடன் வாஜ்பாய் நாடாளுமன்ற தேர்தல் குறித்து ஆலோசனை



நாடாளுமன்ற தேர்தல் ஆயத்தப பணிகள்குறித்து, பாரதீய ஜனதா முதலமைச்சர்களுடன் பிரதமர் வாஜபாய் ஆலோசனை நடத்தினார்.

நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் குறித்து, விவாதிப்பதற்காக பா.ஜனதா முதலமைச்சர்களின் கூட்டத்தை பிரதமர் வாஜ்பாய் கூட்டி இருந்தார். டெல்கியில் பிரதமர் வாஜ்பாய் வீட்டில் இந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரிஜெஷ் மிஸ்ரா, பா.ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர்களும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

பா.ஜனதா ஆட்சி நடைபெறும் 7 மாநிலங்களிலும் நடைபெற்று வரும் தேர்தல் முன் ஏற்பாடுகள் குறித்து கூட்டத்தில் பரிசீலிக்கப்படடது.

மாநில அரசின் வளர்ச்சித்திட்ட பயன்கள் ஏழை எளிய மக்களை சென்று அடைய வேண்டும் என பிரதமர் வாஜ்பாய் அப்போது கேட்டுக்கொண்டார்.

பா.ஜனதா கூட்டணி அரசு பற்றி தற்போது மக்கள் மத்தியில் உள்ள நல்லெண்ணத்தை மேலும், அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் படியும் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

# கூட்டணி குறித்துப் பேச்சு நடத்த வெங்கையா நாயுடு சென்னை விஜயம்

அ.தி.மு.க.வும் - பா.ஜ.கவும் கூட்டணி அமைப்பது நிச்சயமாகியுள்ள நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்திக்க பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு எதிர்வரும் 28ஆம் திகதி சென்னை வரவுள்ளார்.

இதன்போது, கூட்டணி இடங்கள் பகிர்வு குறித்து இருவரும் விரிவாக பேச்சு நடத்தவுள்ளனர்.

தி.மு.க தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் துணைப்பிரதமர் அத்வானி, ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் பேசி 'முக்கிய' உறுதிமொழிகள் சிலவற்றை கொடுத்ததையடுத்து கூட்டணி அமைப்பது உறுதியானது.

இந்தநிலையில், வெங்கையா நாயுடு சென்னையில் ஜெயலலிதாவை சந்திக்கவுள்ளார். முன்னதாக, நேற்றுமாலை ஜெயலலிதாவை சந்திக்க அனுமதி கேட்டு வெங்கையா நாயுடு பக்ஸ் அனுப்பினார். அதை ஏற்றுக்கொண்ட ஜெயலலிதா வெங்கையாவை சந்திக்க ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எட்டு ம.தி.மு.கவினரின் பிணை மனுவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்

ம.தி.மு.கவினர் 8 பேருக்கு சென்னை உயர்நீதிமன்றம் பிணை வழங்கியதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல் முறையீட்டு மனுத்தாக்கல் செய்துள்ளது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுடன் சிறையில் இருந்த 8 பேருக்கும் கடந்த 12 ஆம் திகதி உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது.

இந்த நிலையில், இந்தப் பிணையை ரத்துச் செய்யக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது. பொடா சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதும், பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்வதும் குற்றம் என இந்த மனுவில் தமிழக அரசு கூறியுள்ளது.

மேலும், உயர்நீதிமன்றம் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் பிணையை வழங்கியுள்ளதாகவும், வெளியே வந்துவிட்ட இவர்கள் சாட்சியங்களைக் கலைத்து விடுவார்கள் என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிணைகோரி வை.கோ தாக்கல் செய்துள்ள மனுவின் மீதான விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு பொடா சிறப்பு நீதிமன்றம் ஒத்திவைத்துவிட்டது. நேற்று இந்த நீதிமன்றத்தில் சுமார் 1 மணி நேரம் தனக்காக வை.கோ வாதாடினார்.

இதையடுத்து, தமிழக அரசின் சார்பில் வாதாட சட்டத்தரணி என். ஆர்.சந்திரன் எதிர்வரும் 27 ஆம் திகதி தான், நீதிமன்றத்தில் ஆஜராக முடியும் என்று அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வை.கோவின் மனு மீதான விசாரணை 27 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி கூட்டணி சமாதான முயற்சிகளுக்குச் சவால்!

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டு, சமாதானத்திற்கும், தமிழினத்திற்கும் மிகப்பெரிய சவாலாகும். இந்தச் சவாலைச் சந்திப்பதற்கு தயாராகவேண்டுமென்ற சேதியைச் சொல்ல இப்பொங்குதமிழ் தினம் பயன்படும்.

இவ்வாறு மலையக மக்கள் விடுதலை முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொண்ட சந்திரசேகரன் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

சமாதானத்திற்கும், தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் எந்த விதத்திலும் ஆதரவளிக்காதவர்கள், இனவாத்தை கிள்ளிவிட்டவர்கள், இன்று ஓரணியில் திரண்டுள்ளனர். இது ஒட்டுமொத்தமாக தமிழினத்துக்கு மிகப்பெரிய சவாலாகும்.

இந்த சவாலைச் சந்திப்பதற்கு தயாராகவேண்டும் என்ற செய்தியைச் சொல்ல இப்பொங்கு தமிழ் நிகழ்வு பயன்படும்.


அரசு தமிழ் மக்களின் கோரிக்கைகது மதிப்பளிக்கவேண்டும். இந்த வகையில் சிறுபான்மைத் தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவே இந்த பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறுகிறது.

நானும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்தவன் என்ற வகையில் அரசின் அங்கம் என்றாலும் இதில் கலந்துகொள்வதைக் கடமையாகக் கருதுகின்றேன்.

சமாதான முன்னெடுப்புக்களை விமர்சித்தவர்களின் கூட்டு -இன்னொரு யுத்தத்திற்கு வழிசமைக்குமே தவிர சமாதானத்தைக் கொண்டுவராது.

தமிழ் மக்கள் சமாதானத்திற்கு தயாராகவே உள்ளனர். ஆனால், அந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள அரசுகள் தயாரில்லை என்றால் அதற்கான விளைவுகளை ஏற்கவும் அவர்கள தயாராக வேண்டும்.

சமதானத்திற்கும், யுத்தநிறுத்தத்திற்கும் முக்கியமான பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் சமாதானம் சாத்தியமில்லை என்றார்.



செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தைப் படத்தில் காணலாம்.

# ஐ.தே.முன்னணி மக்கள் ஆணையை தேர்தலின்மூலம் உறுதிப்படுத்தட்டும்!

## சவால் விடுக்கிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி தனது மக்கள் ஆணையைத் தேர்தல் மூலம் மீண்டும் நிருபிக்கவேண்டும் என சவால் விடுத்தார் - ஜே.வி.பி கட்சியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா.

சிங்கள ஊடகமொன்றிற்கு அவர் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

2001ம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணை வலுவிழந்துள்ளது.

தற்போது, ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி செய்து கொண்டுள்ள உடன்பாட்டின் மூலம், பொதுஜன ஐக்கிய முன்னணி பலமடைந்துள்ளது.

தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் அது எமக்கே சாதகமாக அமையும். இதனை நிராகரிக்க விரும்பினால், ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் தேர்தல் ஒன்றை நடத்தி அதில் வேண்டு மானால் வெற்றிபெற்றுக் காட்டட்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பல அபிவிருத்தி நடவடிக்கைகளும், குறைபாடுடையனவாக காணப்படுகின்றன. குறிப்பாக கிராமப்புற அபிவிருத்தி முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இவற்றையெல்லாம் உள்ளடக்கிய வகையிலான செயற்பாட்டைக கொண்டதொரு சிறந்த கட்சிக்கூட்டமைப்பையே நாம் ஏற்படுத்தியுள்ளோம், எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# புலிகளுடனான உடன்படிக்கையிலிருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலகவில்லை!

## ஹக்கீமை சாடுகிறார் பேரியல் அஷ்ரப்

விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து இதுவரை விலகாமல் இருப்பதையிட்டு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமை - பேரியல் அஷ்ரப்பின் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இந்தக் கட்சியின் பேச்சாளர் கலாம் - ஹக்கீமுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது -

நான் மிகவும் அதிர்ச்சியும், ஏமாற்றமும், மனவருத்தத்துடனும் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன். நீங்கள் விடுதலைப்புலிகளின் தலைவருடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேறுவதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக்கூறும் தாங்கள், வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்ததாகவும் இது ஒரு வரலாற்று ஆவணம் எனவும் தெரிவித்தீர்கள்.

இந்தக் கையொப்பத்திற்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல என பிரகடனம், செய்தபோது நீங்கள் மௌனமாக இருந்தீர்கள். இதன்மூலம் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் எனவும் அந்தக் கடித்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய நிறுவனத்திற்கு பெற்றோலிய விநியோகம்; இலங்கைக்கு 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா நஷ்டம்!



(கொழும்பு)

இந்திய நிறுவனத்திற்கும் பெற்றோலியம் வழங்குவதால் - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளொன்றுக்கு 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நட்டம் அடைகிறது.

தொழிலமைச்சர் மிகிந்த சமரசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தேசிய சந்தை விலைக்குக் குறைவான விலைக்கே இந்திய நிறுவனத்திற்கு எரிபொருள் வழங்குவதால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாளொன்றுக்கு 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

இந்திய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நூறு இலங்கையில் உள்ளன. இவ்வாறு இயங்கிவரும் குத்தகைக்கு விடப்பட்ட இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு குறிப்பிடப்பட்டவிலைக்கே எரிபொருள் வழங்கப்பட்டுவருகின்றது.

இதனால் பாரியளவு நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைகிறது.

இருவேறு அளவைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இந்த எரிபொருள் விநியோக நடவடிக்கையால் - 4 ரூபா 47 சதம் வரையில் நட்டமடைய வேண்டியுள்ளது.

இது இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# இணையத்தில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானதாம்!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - ஏசியன் ரிபியூன் செய்தி நிறுவத்திற்குத் தொலைபேசி வாயிலாக அளித்த பேட்டி என இணையத்தளத்தில் வந்த செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும்.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்களைத் தவறான பாதையில் அழைத்துச்செல்லும் இவ்வாறான வதந்திகளை நம்ப வேண்டாம். சுதந்திரக்கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையிலான வெற்றிகரமான கூட்டணிக்கு இடைஞ்சலாக உள்ளவர்களின் வேலையே இதுவாகும்.

எனவே இந்த இணையத்தளத்தில் வந்த செய்தியை நாம் முற்றாக மறுக்கின்றோம். எமது தலைவர் இதுவரை இலங்கையிலோ, வெளிநாட்டிலோ எந்த ஊடகத்திற்கும் பேட்டி எதுவும் வழங்கவில்லை. இதேவேளை குறித்த கட்சியின் தலைவர் இந்தப் பேட்டி தொடர்பாக எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

# எகிப்தியச் சிறையில் வாடிய 104 இலங்கையர் விடுதலை!

எகிப்தியச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 104 இலங்கையர்கள் விடுவிக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும்பொருட்டு சட்டவிரோதமாக எகிப்தினூடாகப் பயணித்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள்.

சிறைகளில் உள்ளோரைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள சிரமங்காரணமாக, எகிப்திய அரசாங்கம் பிறநாட்டுக் கைதிகளை அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பத் தொடங்கியுள்ளது.

கொழும்புக்கு வருகைதந்த இந்தக் கைதிகளை கொழும்பு பொலிஸார் விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளார்கள்.

# விசேட மருந்து இறக்குமதிக்கு வற்வரி அறவிடப்படமாட்டாது

## நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவிப்பு

விசேட மருந்துவகைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றபோது - வற்வரி அறவிடப்படமாட்டாது என்றும் நாடாளுமன்றத்தில் அமைச்சர் கே.என் சொக்ஸி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், மருந்தகத் திணைக்களம் என்பவற்றால் இறக்குமதி செய்யும்போது இந்த வற்வரி விதிக்கப்பட்டதென அமைச்சர் அந்த அறிக்கையில் உறுதியளித்தார்.

இதேவேளை வற்வரி முறை நீக்கம் இத்தகைய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட போதிலும் இவற்றில், சுங்கவரி விதிக்கப்படுவதனால் நுகர்வோர் பாதிக்கப்படுவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். வற்வரி முறை மூலம் உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்படுவதாகவும், அவற்றைப் பாதுகாக்க அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் தினேஸ் குணவர்த்தன இது தொடர்பாக கருத்து தெரிவித்தார். (01)



# வேறு கட்சிகள் நடத்தும் கூட்டங்களில் பொ.ஐ.மு எம்பிக்கள் உரையாற்றத்தடை

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியினது அல்லது பொ.ஐ.மு.செயலாளரின் அனுமதியின்றி, வேறு கட்சிகள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களில் பேசக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர், கடந்த திங்கட்கிழமை இரவு ஜனாதிபதி மாளிகையில் பொ.ஐ.மு.குழுவினரைச் சந்தித்தபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த அறிவிப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் வேறு எந்தக் கட்சியும் ஒழுங்கு செய்யும் கூட்டங்களில் பொ.ஜ. முன்னணி செயலாளரின் அனுமதியின்றி எவரும் கலந்துகொள்ளமுடியாது எனவும் தெரிவித்தார்.

# வவுனியா - தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் விபரம்!

வவுனியா - தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2004 ஆம் ஆண்டில் கல்வியைத் தொடர அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:

**ஆரம்பக் கல்வி**

தர்மலிங்கம் கிருஷ்ணவேணி (அல்வாய்), துரைசாமி சுதாகர் (யோகபுரம்), சுந்தரலிங்கம் பிரசாந்தி (சாத்திரிகூளாங்குளம்), றோக் அனிஸ்ரா யூலியஸ் (குடத்தனை), ராமனாதன் கிருஷாந்தி (யாழ்ப்பாணம்), கணேஸ் சத்தியமாலா (சங்கானை), அம்பலவாணர் ராஜரூபினி (துணுக்காய்), கீதா ஜெயரத்தினம் (நாகர்கோவில்), தனபாலசிங்கம் கௌரி (கிளிநொச்சி), கருப்பையா கவிதா (பூவரசங்குளம்), மகா கணபதீஸ்வரக்குருக்கள் சிந்துஜா (வண்ணார்பண்ணை), பூபாலசிங்கம் தயானி (கிளிநொச்சி), இரத்ராஜகம் கணேசலிங்கம்(இயக்கச்சி), அந்தோனிப்பிள்ளை ரஜிகா (புதுக்குடியிருப்பு), ஆறுமுகம் சிவரஞ்சினி (வல்வெட்டித்துறை), தேவபாலன் சுகிர்தா (திருநெல்வேலி), சண்முகராசா நிசாந்தி (யாழ்ப்பாணம்), தியாகராஜன் சிவரஞ்சன் (செட்டிகுளம்), விஜிதா சின்னடியன் (கீரிமலை), யோகராஜா தயாளன் (அரியாலை), மொகமட் செரீப் பாசர்கா (குறிச்சாப்பிட்டி), செந்தில்நாதன் அபிராமி (யாழ்ப்பாணம்), கிரிதா கோபாலபிள்ளை (கரவெட்டி), லாஜிதா ஜெயபால கணேசன் (நீர்வேலி), அகல்விழி முத்துசாமி (கெக்கிராவ), இராசதுரை நளாயினி (கோண்டாவில்), மனோகரன் கிருபாலினி (சாவகச்சேரி), மேனகா யோகராசா (கொக்குவில்), செபஸ்ரியான் திருசா பாச்செக் (பேசாலை), சிவநாதான் கிருபராணி (மூதூர்), ராதிகா பாலசுந்தரம் (முல்லைத்தீவு), சுப்பிரமணியம் சசிகலா (புத்தளம்), இராசேந்திரலிங்கம் பிரசாத் (கிளிநொச்சி), விஜிதா துரையப்பா (சாத்திரிகூளாங்குளம்), சிவப்பிரகாசம் ஜெகதாம்பாள் (கிளிநொச்சி), அன்னலிங்கம் ரவீந்திரன் (நீர்வேலி), சிதம்பரப்பிள்ளை தர்சன் (வவுனியா), பூபாலசிங்கம் லக்ஷி (பருத்தித்துறை), முத்துராசா கமலதாஸ் (பூந்தோட்டம்), சிவராசா சிறீதரன்(முல்லைத்தீவு), வடிவேல் ஜெயகாந் (முள்ளியவளை), புலந்தன் பார்த்தசாரதி (ஓமந்தை), ராஜினி தில்லைசிவலோகநாதன் (புத்தூர்), செல்வரத்தினம் செல்வநாயகி (ஆனைக்கோட்டை), இராசரத்தினம் சசிதரன் (வரணி), கனகரத்தினம் விஜேயானந்தினி (கைதடி), அருமைபாலன் சிவயாழினி (யாழ்ப்பாணம்), நிசாந்தினி நல்லலிங்கம் (அச்செழு), சற்குணம் கமலதீபன் (கோண்டாவில்), துஷ்யந்தி செல்லத்துரை (வைரவபுளியங்குளம்), அல்பிரட் கலியுகச்செல்வி (புதுக்குடியிருப்பு), சிறீரஞ்சினி சத்தியமூர்த்தி (வவுனியா), சத்தியசீலன் ருக்ஷி (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் பாஸ்கரன் (வரணி), சந்திரசேகரம் சசிலா (சாவகச்சேரி), வாணிகிருஸ்ணா ராதாகிருஸ்னன் (பரந்தன்), ஞானசேகரம் மதுரா (ஆனைக்கோட்டை), ஐயாத்துரை உஷாநந்தினி (கரவெட்டி), நாராயணசாமி நிஷ்காந்தி (கிளிநொச்சி), ஷாமினி சிறீ ரமணன் (சிலாபம்),

**இந்துசமயம்**

பத்மநாதன் மதுரா (ஆவரங்கால்), வித்யா நவலிங்கம் (ஊர்காவற்றுறை), ராஜரட்ணம் சுதர்சன் (புதுக்குடியிருப்பு), இராமகிருஷ்ணன் சீனிவாசன் (தும்பளைமேற்கு), மாணிக்கராசா விஜிதா (பருத்தித்துறை), இராஜேந்திரம் சிறீகரன் (முள்ளியவளை), இராஜகோபால் வசந்தினிதேவி (நவபுரம்), சீவரட்ணம் ரமீலா (சுன்னாகம்), மகாராஜா அனுசுலா (மானிப்பாய்), சண்முகரட்ணம் பிருந்தா (கைதடி), விநாயகமூர்த்தி சுதர்சினி (அல்வாய்), பரராஜசிங்கம் ராதிகா (புலோலி), சதாசிவம் சாந்தநேசன் (வரணி), பாலசுந்தரம் சுதர்சினி (மூதூர்), கணேசன் பரிமளகாந்தன்(திருக்கோவில்), கிருஷ்ணதேவி மோகனதாஸ் (வவுனியா), கனகசபை இளங்கோவன் (மந்துவில்), நாகராஜா ஜெயலலிதா (பூநகரி), மயில்வாகனம் ஐங்கரன் (பூந்தோட்டம்), சர்மிளா பொன்னம்பலம் (உடையார்கட்டு), நாகராசா இராஜவதனி (யாழ்ப்பாணம்), முத்துலிங்கம் கோமேஸ் (யாழப்பாணம்), மணிவாசகம் கீர்த்திபா (வண்ணார்பண்ணை), நவீந்திரராஜ் சுஜீவன் (சுன்னாகம்), யாழினி சிவனேசன் (ஆனைக்கோட்டை), ஐயாத்துரை லோகேஸ்வரி (மல்லாவி), குலசிங்கம் சுபாஜினி (திருகோணமலை), கைலாயபிள்ளை சந்திரகுமார் (கல்முனை), கோணமலை பிரதீபன் (அக்கரைப்பற்று), துரைராஜா தாரணி

**கிறிஸ்தவம்**

பழனியாண்டி ஜெபச்செல்வி (வவுனியா), டி.சொய்ஸா.எல்.எப்.டி (திருமலை), செல்வநாயகம் உஷாந்தினி (புதுக்குடியிருப்பு), மாசிலாமணி யாழினி (உடுவில்), ஜே.எஸ்.என். அன்ரோனியா (திருமலை), அஞ்சலா மென்சி சி.பி (திருமலை), ஆனந்தராஜா விக்ரோ அமலினி (பருத்தித்துறை), வேஜின் மேரிஜீலி (இராமநாதபுரம்), அனித்தா அலோசியஸ் (இளவாலை), கனிஸ்ரா நித்தியா யாகோபு (உருத்திரபுரம்), செல்லத்துரை ஸ்ரனிஸ்லஸ் (குருநகர்), ஆன்றோசலின் பெரேரா (மன்னார்), றோஸ்மேரி எம்.ஜெகதாஸ் (பாலையூற்று), இனஸ்ரிக் ரெஜிஈவேட் ஆனந்தராஜா (வவுனியா), கரோலின் டயானா சலிதா (மன்னார்), லூட்ஸ்மேரி ஆன் (ஹட்டன்), அந்தோனிமுத்து அனிஸ்மேரி (பொகந்தலாவ), மேரி கலிஸ்ரா குரூஸ் அருளப்பு (மூதூர்), செல்லையா ரஞ்சினி (கல்முனை), திருச்செல்வம் வேந்தகுமார் (சுன்னாகம்), பீற்றர் சியாமளாமேரி ஆன் (மாத்தளை), இராஜதுரை சமிலா (கல்முனை).

**விவசாயம்**

சிவராஜா சபிதா (மட்டக்களப்பு), ஞானேஸ்வரன் பிரதீபன் (மட்டக்களப்பு), ஆதிமூலன் பிரசாந்தி (மட்டக்களப்பு), வேதநாயகம் தயாநந்தன் (வவுனியா), மொஹமட் சனூஸ் சவ்றினா பர்வின் (நுவரெலியா) அனித்தா தாரணி சிவஞானம், (மட்டக்களப்பு) முருகேசு யாழினி (மட்டக்களப்பு), பீதாம்பரம் பிரவீனா (மட்டக்களப்பு), பரமகுரு திருமாவளன் (திருமலை), மொகமட் சனூஸ் பார்த்திமா (நுவரெலியா), மொகமட் சாஜகான் (அனுராதபுரம்), சிவஞானச்செல்வம் விஜிகரன் (அம்பாறை), ஜெஸ்லின் றிசாட் (அனுராதபுரம்), சண்முகநாதன் பிரதீபன் (மட்டக்களப்பு), மணியம் கருணாகரமூர்த்தி (வவுனியா), கந்தசாமி விஜயதிலீபன் (வவுனியா), தர்மகுலசிங்கம் வித்யா (வவுனியா), செல்வரட்ணம் ஜெகன் (மட்டக்களப்பு), கிறிஸ்ரின் டெறிக்குரூஸ் (மன்னார்), மொஹமட் நசார் (திருமலை), நடராஜா ரமணன் (திருமலை), குணேசேகரம் குணரட்ணம் (கிளிநொச்சி)

**விஞ்ஞானம்**

தங்கவடிவேல் செந்தூரன் (கரவெட்டி), தியாகலிங்கம் நிவேதினி (யாழ்ப்பாணம்) முருகையா மணிமாறன் (அளவெட்டி), நித்தியா செல்வராஜா (மாதகல்), அல்பிரட குரூஸ் திரேசா சின்னமலர் (மன்னார்), பாலசிங்கம் பாலசோபனா (சாவகச்சேரி), பரராமசிங்கம் கார்த்திகேயன்

(12 ஆம் பக்கம் பார்க்க)




நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், சிம்ரன் நடித்த
ஏழுமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Can You do a lot of
(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)

## தென்மராட்சி தெற்கு மக்கள்

# மீளக்குடியமர அனுமதிக்குமாறு வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்


## சுதந்திரதினத்தன்று ஆரம்பம்

தென்மராட்சி பிரதேசத்தில் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில், மக்களை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி சுதந்திர தினத்தன்று, சாகும்வரை உண்ணாவிரதப போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகத் தென்மராட்சி தெற்கு மக்கள் இராணுவத்தரப்பிற்குத் திடமாக அறவித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி திடீர் சந்திப்பொனறினை ஏற்பாடு செய்திருந்த வரணி பிரதேசப் படைத்தளபதி, நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே மீளக்குடியமர்வதற்கு அனுமதி அளிக்கமுடியும் என்று தெரிவித்ததை அடுத்தே, இதனை முற்றாக நிராகரித்த மக்கள், இலங்கைச் சுதந்திரதினமான அடுத்த மாதம் 4 ஆம் திகதிமுதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து ஐந்து வருடங்களாக அவலவாழ்வை அனுபவித்துவரும் தென்மராட்சி தெற்கு மக்கள், மீளக்குடியமர்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருவதனால், ஏமாற்றத்தின் விளிம்புக்குச் சென்ற நிலையில், தமது போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தென்மராட்சி தெற்கு, மறவன்புலவு, தனங்களப்பு, மற்றும் கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளின் ஒரு பகுதி மக்கள் தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறும், இரண்டு பாடசாலைகளை உடன் திறக்குமாறும்கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொலைநகல் மூலமாகக் கடிதம ஒன்றை அனுப்பி வைத்துள்ளபோதிலும், இதுவரை எந்தப் பதிலும் வழஙகப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (34)



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்தியத் திரைப்பட இயக்குநர் மணிவண்ணன் செய்தியாளர்களைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு

1998 ஆம் ஆண்டுக்குப் பின் ஆசிரியர் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வொன்று, நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் ஆசிரியர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் ஓய்வூதியம் பெறுவது, சம்பள உயர்வு, லீவு முதலான பல விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளதால், அனைத்து ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

## தமிழ் சினிமா

# வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டவை சமூக சிந்தனையை எதிர்பார்க்க முடியாது

(யாழ்ப்பாணம்)

தமிழ் சினிமா என்பது ஒரு வியாபாரம். அதில் சமூக சிந்தனைகளையோ, பிரசாரங்களையோ பெரிதாக எதிர்பார்க்கமுடியாதென நேற்று முன்தினம் தென்னிந்திய நடிகரும், திரைப்பட இயக்குநருமான மணிவண்ணன் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையிலுள்ள நில்கோ ஹோட்டலில் வைத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்ரீதியான கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிக்க மறுத்த அவர், சினிமா சந்பந்தமான கருத்துக்களையே தெரிவித்தார். தென்னிந்திய திரைப்படங்கள் இன்று வியாபாரத்தையே நோக்கமாகக் கொண்டவை. இவற்றில் சமூதாய சீர்த்திருத்தக் கருத்துக்களைப் பெரிதாக எதிர்பார்க்க முடியாது.

ஈழத்தமிழர்களுடைய வாழ்வியலை இன்றும் முழுமையாகத் தெனனிந்திய திரையுலகம் பிரசவிக்கவில்லை. ஏற்கனவே உள்ளதுபோல அரைகுறையாகப் பிரசவிக்க நானும் விரும்பவில்லை.

நேரடியாக இங்கு வந்து சூழ்நிலைகளை அவதானித்து, மக்களின் உணர்வுகளை தெரிந்துகொண்டு அதை திரையிலே காட்ட விரும்புகிறேன். அதனையே ஈழத்தமிழருக்குச் செய்யும் பெரிய உதவியாகக் கருதுகின்றேன் எனவும் தெரிவித்தார்.

மணிவண்ணன் ஈழப் பிரச்சினைகளை மையமாக வைத்து யாழ்ப்பாணத்தில் காட்சிகளை அமைத்து, திரைப்படம் ஒன்றை தயாரிக்கவுள்ளார். அதற்கான சூழ்நிலையை ஆராய்வதற்காகவே யாழ்ப்பாணம் வந்திருந்தேன்.

கொழும்பிலிருந்து தரைவழிப் பாதையாக யாழ்ப்பாணம் வந்த இவர், வன்னியிலும் சில முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இவரது வருகையைச் சிலர் தமக்கு சாதகமாக பயன்படுத்த முனைந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ச)

# நாட்டுப்பற்றாளர் மூவர் சுகவீனத்தால் சாவு

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக நாட்டுப் பற்றாளர் மூவர் சாவடைந்துள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி வியாபாரி மூலை, இன்பருடி - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கார்த்திகேசு மதியழகன் (மதி) என்பவர் சாவடைந்தார்.

இதேபோல், கடந்த 2001 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3 ஆம் திகதி அன்று மிருசுவில் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் ஞானபபிரகாசம் மரியதாஸ் செல்வக்கோன் என்ற நாட்டுப்பற்றாளர் சாவடைந்தார.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 30 ஆம் திகதியன்று புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி சிவநேசன் என்பவர் வீரச்சாவடைந்தார் எனவும், நேற்றிரவு புலிகளின் குரல் தெரிவித்தது.

இவர்களுக்குப் புலிகளின் குரல் தனது வீரவணக்கத்தைத் தெரிவிப்பதாக அது மேலும் தெரிவித்திருந்தது.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## முதலாவது அகவையில்



பெயர் : சா.சர்மிலா
முகவரி : கச்சேரி, கிளிநொச்சி.

## நான்காவது அகவையில்



பெயர் : க.சாருஜன்
முகவரி : இரத்மலானை, கொழும்பு.

## பத்தாவது அகவையில்



பெயர் : ர.ஜனிஷா
முகவரி : சங்கத்தார் வயல், இயக்கச்சி.

# விவசாயிகளுக்கு அதிகளவு கடன்களை தேசிய சேமிப்பு வங்கி வழங்கியுள்ளது

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு கடந்த வருடம் தேசிய சேமிப்பு வங்கி அதிக தொகையைக் கடனாக வழங்கியுள்ளது எனத் தெரிய வருகிறது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நலன்கருதி - தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, செலான் வங்கி ஆகியன குறைந்த வட்டியில் கடன்களை வழங்கியுள்ளன. இவற்றில் அதிக கடன் தொகையை தேசிய சேமிப்பு வங்கி வழங்கியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி ஒரு கோடியே 45 லட்சம் ரூபாவையும், இலங்கை வங்கி 1 கோடியே 7 லட்சம் ரூபாவையும், செலான் வங்கி 33 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவையும் விவசாயிகளுக்கு கடனடிப்படையில் வழங்கியுள்ளன.

இந்தக் கடன் தொகையில் அதிக கடன் தொகையைப் பெற்றவர்களில்- உடுவில் பகுதி மக்கள் 18 இலட்சம் ரூபாவையும், புத்தூர்ப் பகுதி மக்கள 46 இலட்சம் ரூபாவையையும், உரும்பிராய் பிரதேச மக்கள் 34 இலட்சம் ரூபாவையும், புலோலிப் பகுதி மக்கள் 74 இலட்சம் ரூபாவையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# சடலத்தைப் பொறுப்பேற்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவேளை, உயிரிழந்த வயோதிபரின் சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு, வைத்தியசாலைப் பொலிஸார் உறவினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த 11 ஆம் திகதி உடையார்கட்டு, செல்வபுரம் நூறு ஏக்கர் திட்டத்தைச் சேர்ந்த சே.தர்மலிங்கம் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது சிகிச்சை பலனளிக்காதநிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இறந்தவரின் உறவினர்களுடன், உடன் தொடர்புகொள்ள முடியாதமையால், சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்.மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் பதவிக்கு விணணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணபபதாரி இலங்கை அதிபர் சேவை அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் - தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உரிய மாதிரி படிவத்தை பூரணப்படுத்தி, 30.01. 2004 இற்கு முன் வலயகல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலய கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (34)

## உசன் இராமநாதன் வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஒலிபெருக்கி சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வித்தியாலய முன்னாள் ஆசிரியர் கணபதிப்பிள்ளையின் நினைவாக, அவரது பிள்ளைகள் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டு, நேற்று முன்தினம் முதல் அவை இயங்க வைக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் ந.நவரத்தினராசா தெரிவித்தார். (34)

# இளைஞர்களுக்கிடையே முறுகல் கத்தி வெட்டில் முடிவடைந்தது

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தன்று வெடி கொளுத்தியது தொடர்பாக இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட முறுகலொன்று, கத்தி வெட்டில் முடிந்தது. இந்தச் சம்பவம் இணுவில் வங்கியடிப் பகுதியில் இடம் பெற்றது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது - வெடிகொளுத்தி விளையாடியது தொடர்பாக இரு இளைஞர் குழுக்களுக்கிடையே பிணக்கு உருவாகியது. இந்த பிணக்கின் உச்சகட்டமாக இளைஞர்கள் சிலர் வீடொன்றுக்குள் புகுந்து இளைஞர் ஒருவரின் சகோதரியைத் தலையில் பிடித்து வீதிக்கு இழுத்து வந்தனர்.

இதனால், ஆத்திரமடைந்த யுவதியின் தாயார் மிளகாய் தூளை கரைத்து சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மீது ஊற்றியதோடு, கத்தியினால் இளைஞர் ஒருவரை வெட்டியுள்ளார். கழுத்தில் காயமடைந்த இளைஞர் - தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் - இருபகுதியினருக்கும் இடையில் சமரசம் செய்து பிரச்சினையைச் சுமுகநிலைக்கு கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கடலோட்டு இயந்திரவியல் மாணவர்களுக்கு கொடுப்பனவு

யாழ்.கடற்தொழில் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் கடந்த வருடம் ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம்வரை பயிற்சிகளைப் பெற்று, வெளியேறியவர்களுக்கான மார்கழி மாதக் கொடுப்பனவு மற்றும் போறூட் நிறுவனம் வழங்கும் உதவி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும்படி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை கோரியுள்ளார். காரியாலய நேரத்தில் கல்லூரி வளாகத்திற்கு வருகைதந்து, மேற்படி கொடுப்பனவு உதவியைப் பெற்றுக்கொள்ள முடியு மெனவும் அவர் தெரிவித்தார். (206)

## ஒஸ்மானியா கல்லூரியில் கால்கோள் விழா

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான கால்கோள் விழா, கடந்த 16 ஆம் திகதி கல்லூரி அதிபர் எம்.முபாறக் தலைமையில் இடம் பெற்றது.

இந்த விழாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பாளரும், யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் மக்கள் பணிமனை தலைவருமான எஸ்.சுபியான் உட்படப் பல முஸ்லிம் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் 1ஆம் ஆண்டிற்கு 13 மாணவர்கள் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

# குழந்தைகளின் உளவியல்

குழந்தைகளுக்கு அன்பைச் செலுத்தல் உளவியல் தேவைகளாகவும், உயிரியல் தேவைகளாகவுமுள்ளது.

குழந்தையின் உளவியல் மாற்றங்களாக - அழுதல், சிரித்தல், குரல் எழுப்புதல், முகபாவம், உற்றுப்பார்த்தல் என்பன காணப்படுகின்றன.

குழந்தைகளின் பிரியமாதல், பாதுகாப்பான பிரியமாதல், பெற்றோர் உடல் அமைவும் அல்லது பதகளிப்பான பிரியமாதலாக பராமரிப்போருடன் அமையும்.

குழந்தைகளுக்கு மனரீதியான பக்குவம் 4-5 வயதில் ஏற்படும். 2-4 வயதில் சேர்ந்து விளையாடுவர், ஆண், பெண் வேறுபாடு 6 - 7 வயதில் ஏற்படும். தன்னைப் பற்றிய நம்பிக்கை, எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை, தன்னைச் சூழவுள்ள உலகத்தைப் பற்றிய நம்பிக்கை ஏற்படும். தனது குணாம்சம் பற்றிய விபரம் 6-7 வயதில் ஏற்பட்டுவிடும். இதன்போது, தீர்க்கமான கருத்து தன்னைப்பற்றி ஏற்படும். மற்றப்பிள்ளைகளுடன் ஒப்பிடுவர். தன்னைப் பற்றியும் தனது நிலைபற்றியும் கணிப்பீடுகள் செய்வர். இதன்போது அதியுயர் கணிப்பீடுகள் செய்வர். அதியுயர் கணிப்பீடு நல்லது. தாழ்ந்த கணிப்புக்கூடாது. பிரபல்யம், கவர்ச்சி, கல்வித்திறமை பற்றி சக வயதுடையோருடன் ஒப்பிடுவர். தனி ஒருவரின் நம்பிக்கையானது - மன நிலையிலும், நடத்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனச்சோர்வு நிலையில்- எண்ணங்கள் தன்னைத் தோல்வி அடையச் செய்யும். அறிவாற்றல், தவறுகள் தான சார்ந்ததாக அல்லது இருவேறு கருத்துடைய எண்ணங்களாக அமையும்.

குழந்தையின் நடத்தை அதன் வயதிற்குச் சரியானதா அல்லது அசாதாரணமானதா என ஆராயும்போது, குழந்தையில் மாற்றங்கள், உணர்வுகளிலும், நடத்தையிலும், தொடர்பாடலிலும் காணப்படலாம். இந்த மாற்றங்களுக்கு ஏதுவாகச் சிலகாரணிகள் குறைவாகக் காணப்படலாம் அல்லது ஏதுவாக வேறு சில காரணிகள் கூடுதலாகக் காணப்படலாம்.

மாற்றங்கள் ஏற்பட ஏதுவான குறைவான காரணிகளை நிவர்த்திசெய்ய வேண்டும். மாற்றங்கள் ஏற்பட மேலதிகமான காரணிகளை அகற்றவேண்டும்.

உதாரணமாக - நடத்தைக் கோளாறு குழந்தைகளுக்கு அதிக அக்கறை அல்லது கரிசனை செலுத்தாததால் ஏற்படுகின்றது. அதனை நீக்க அந்தக் குழந்தைக்கு அதிககரிசனை செலுத்த வேண்டும்.

அடம்பிடிக்கும் குழந்தைக்கு அதிகம் கரிசனை கொடுத்தலே காரணமாகும். அத்தகைய நிலையில் பிள்ளைக்குக் கேட்டதை வேண்டிக்கொடுக்காமல், பின்னர் வேண்டிக் கொடுப்பதால் அதாவது, அதிக கரிசனை செலுத்தாது விடுவதால் நீக்கலாம். குழந்தைகளில் புலன் இயக்கம் தன்னை வேறுபொருட்



## பிரச்சினைகள்

களிலிருந்து வேறுபடுத்தல் 2 வயதில் வரும் சொற்களைப் பயன்படுத்துவர்.

6 - 9 வயதில் சகதோழமை, எதிர்பார்ப்புகள், குற்றவுணர்வு, தாழ்வு மனப்பாங்கு உருவாகும். காரண காரியங்களுடன் யோசித்தல் 6-9 வயதில் வரும். 6 வயதில் எண்களைப் பற்றியும், 7 வயதில் கனவளவு பற்றியும், 8 வயதில் திணிவு பற்றியும் விளங்குவர், நிரல்களை வரிசைப்படுத்துவர்.

12 வயதில் எண்ணங்கள் நன்கு விருத்தி அடைந்துவிடும்.பெற்றோரைப் பிரிவர். தங்களை அடையாளப்படுத்துவர்.

குழந்தைகளின் உணர்வுமாற்றத்திற்கு அடிப்படை பதகளிப்பு ஆகும். இதன்போது உடற்தொழிலில் மாற்றங்களாக உலர்ந்த வாய், படபடப்பு என்பன காணப்படும். உளவியல் மாற்றங்களாகப் பயம், ஏக்கம் காணப்படும். பதகளிப்பினை மறைக்குமுகமாக மறுத்தல், காரணம் கூறல், வளர்ச்சியில் பின்னோக்கிச்செல்லல், பதகளிப்பை வேறு விதமாகச் செலுத்துதல் என்பன காணப்படும்.

யௌவனப்பருவத்திற்கான மாற்றங்களில் 6-11 வயதில் நேரடி எண்ணங்கள் ஏற்படும். 12 வயதில் காரண காரியத்துடன் எண்ணங்கள் வரும். கருத்துக்கள், எண்ணங்கள், உருவம் என்பன உருவாகும். இலட்சிய நிலை சமய சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் உருவாகும். பிந்திய நிலையில் சிக்கல் நிறைந்த எண்ணங்கள், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

குழந்தையின் ஆளுமைவிருத்தியில் - குடும்பம், பாடசாலை, சமூகம் தாக்கம் செலுத்தும். இது குழந்தை தன்னைப் பற்றியும், தனது சூழலைப் பற்றியும், அதன் எதிர்காலத்தைப் பற்றியும் - அறிவார்ந்த, உணர்வு பூர்வமான, திடசங்கற்பமான எண்ணக்கருவை உருவாக்கும். இதன்போது குடும்பத்தில் உணவு, உறையுள், அன்பு, கருணை, பாதுகாப்பு அமையவேண்டும். பாடசாலை - சமூகத்தொடர்பையும், மொழியாற்றல் விருத்தியையும், முன்மாதிரிகளின் அனுபவத்தைக் கொடுக்கும்.

சமூகம் - மனச்சாட்சி, சமூகஉறவு, சட்ட வழக்கம் என்பவற்றைப் புகட்டும். இவை குழந்தையில் ஆளுமை, தனிப்பட்ட நடத்தையை விருத்திசெய்யவும் செல்வாக்குச் செலுத்தும்.

**யௌவனப் பருவத்தில் புகைப்பிடிக்கும் பழக்கம் உருவாக ஏதுவான நிலைமைகள்**

- ♥ மனச்சோர்வு நிலை.
- ♥ பாடசாலை பிரச்சினை.
- ♥ பெற்றோர் பிரச்சினை.
- ♥ சிறுபான்மை இனமாக வாழ்தல்.
- ♥ மதுபானம் பாவித்தல்.

**யௌவனப் பருவத்தில் மதுபானம் பாவித்தல**

- ♥ மனச்சோர்வு நிலை.
- ♥ தாழ்ந்த மனநிலை.
- ♥ இலகுவில் குடும்பத்தில் கிடைத்தல்.
- ♥ வேலைசெய்தல்.

பாடசாலை செல்லும் மாணவர்களில் ஏற்படும் நெருக்கடிகள் - அவர்களது குடும்பச் சூழ்நிலை தொடர்பாகவும், தற்போதைய யுத்தச் சூழ்நிலை தொடர்பாகவும் உள்ளன.



இவற்றின் செல்வாக்கு மாணவரின் பாடப்பரப்பில் நாட்டம், பாடசாலை வரவு, பரீட்சைப் பெறுபேறுகள், ஒழுக்கம் என்பவற்றில் பிரதிபலிக்கும். எனவே ஆசிரியர்கள் - மாணவர்களின் செயற்பாட்டைச் சிறந்த ஒரு அளவுகோலாக எடுத்து, அவர்களுக்கு உளவளத்துணை வழங்கல் அவசியமாகின்றது. அதாவது தயவு, தயக்கம், காருண்யம் காட்டல் வேண்டும்.

வீட்டின் பொருளாதாரநிலை, மாணவனைப் பெரிதும் பாதிக்கின்றது. இடம் பெயர்வு வாழ்க்கையினால் பாடசாலைக்குச் செல்லமுடியாதுபோதல், படிக்கும் வசதி குறைதல் பல மாணவர்களின் படிப்பை இடை நிறுத்திவிடுகின்றது.

**அசாதாரண வீட்டுச்சூழலைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்**

- ♥ இடவசதி இன்மை அல்லது அகதி முகாம் வாழ்க்கை.
- ♥ மின்சார வசதியின்மை அல்லது மண்ணெண்ணெய் விளக்கு வசதியின்மை.
- ♥ வீட்டிலுள்ள ஏனையோர் ஊக்கமின்மை.
- ♥ பொருளாதாரக்கஷ்டம்.
- ♥ குடும்பப்பிரச்சினை.
- ♥ வீட்டில் நடக்கும் துன்புறுத்தல்கள்.

இதுவே அநேகமான மாணவர்களது சாதாரண வீட்டுச் சூழலின் நேரடித் தாக்கங்களாகக் காயமடைதல், பெற்றோர், சகோதரர் உயிரிழப்பு, காயமடைந்தவர்களைக் காணல், உறவினர் பிரிவு, பாலியல் வல்லுறவு என்பன அமைகின்றன. பாடசாலை மாணவிகள் கற்பழிக்கப்பட்ட சம்பவங்கள் பல உண்டு. ஆனால், சமுதாயத்தில் அவர்கள் ஒதுக்கப்படுவார்கள் என்ற காரணத்தால் அவை வெளிவருவதில்லை.

ஒரு சிலர் உளவளத் துணையை நாடியுள்ளனர். மிகப்பிரதான பங்கைப் பெறுவது - வன்முறைச் சம்பவங்களின்போது ஏற்படுத்தப்படும் கொடூரக் காட்சிகள், ஒருவரின் மனதில் பதியப்படுகின்றன. இதில் நிகழும் சாதாரண காட்சிகள் பின் அந்தச் சம்பவங்களை மீள நினைவூட்டுகின்றன. இது அவர்களில் உடல்ரீதியாகவோ, உணர்வுரீதியாகவோ, எண்ணங்கள் வாயிலாகவோ, அறிவுசார்ந்த முறையிலோ, நடத்தை வேறுபாடாகவோ பிரதிபலிக்கும்.

**Dr. யமுனாநந்தா**

# கல்யாணப் பெண்ணே...!

இதோ தை பிறந்துவிட்டது. நிறைய முகூர்த்தங்கள், நாட்கள் மணநாளில் எந்தப் பெண்ணும் அழகாகவே மிளிர விரும்புவாள். திருமணநாளன்று அழகு கலை நிலையங்களுக்குப் போவதால் பயனில்லை. திருமண சம்பந்தமாக எல்லாவற்றிற்கும் திட்டமிடுவதுபோல், இதற்கும் திட்டமிடவேண்டும்.

"திருமணம் நிச்சயமான பின்பு, திருமணநாளுக்குக் குறைந்தபட்சம் மூன்றுமாத இடைவெளியாவது இருக்குமில்லையா? இந்தச் சமயத்தில் ஒரு மணப்பெண் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை தன் அழகை மேம்படுத்தவும், பராமரிக்கவும் தேவையான எளிய வழிகளைப் பின்பற்றவேண்டும்.

இதன்முதல் படியாக நல்ல பயிற்சி பெற்ற, திறமையான ஒரு அழகுக்கலை நிபுணரிடம் கலந்தாலோசித்து தன் சருமம், கூந்தல் போன்றவைகள் எந்த வகையைச் சேர்ந்தது? அவைகளிலுள்ள பிரச்சினைகள் என்ன? பிரச்சினைகளைப் போக்கி, அவைகளைப் பராமரிக்க வேண்டிய வழிகள் போன்றவைகளைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

உடல்ரீதியாகவுள்ள பிரச்சினைகளில் முதன்மையானது வேண்டாத உரோமங்கள். இது இன்றைய இளம் பெண்கள் பலருக்கும் மிகவும் பெரிய பிரச்சினை. அடுத்தது சருமம் மிகவும் உலர்ந்து காணப்படுதல். அதனால், ஏற்படும் சுருக்கங்கள், கால்களில் ஏற்படும் வெடிப்புக்கள் இவைகளுக்கான எளியமுறைகளை வீட்டிலேயே செய்யத்தொடங்கிவிடலாம்.



அடுத்து திருமணத்திற்கு அணிய விரும்பும் உடைகளின் நிறங்களைத் தேர்வு செய்தல், உடல்வாகு மற்றும் முக அமைப்பிற்கேற்ற நகைகளைத் தேர்வுசெய்தல், தலை அலங்காரங்களையும், முகஅலங்காரங்களையும் தேர்வுசெய்தல் போன்றவைகளுக்கு தற்போது கணினி பெரிதும் உதவுகிறது. அழகு கலைநிலையங்களிலும் இந்த வசதி உண்டு. இப்படித் தேர்வுசெய்து கொள்வதால், நிதானமாகத் திட்டமிட்டு நேரம் கிடைக்கும் போது தேவையானவைகளை நன்கு பார்த்து தேர்வுசெய்து வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

கடைசிநேரத்தில் ஏதோ திட்டமிட்டுச் செய்து, தேடிச்செல்பவைகள் கிடைக்காமல், அவசர அவசரமாக எவைகளையோ வாங்கி வந்து, ஏதோ வாங்கிவிட்டேன் எனக்கு கொஞ்சம்கூட நிறைவு இல்லை என்ற குறையுடன் ஏன் மணமேடையில் உட்காரவேண்டும்.

அடுத்து உணவுக்கட்டுப்பாடு - இது ஒரு மணப்பெண்ணிற்கு மிகத்தேவை. நிச்சயம் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பின்பு திருமணம் என்றால், திருமணம் நிச்சயமான சந்தோஷம் ஒருபுறம், கட்டுப்பாடில்லாத உணவுப் பழக்கம் ஒருபுறம் என நிறை கூடிவிட்டால் மணப்பெண்ணையே அவளது அக்கா என நினைத்து, கல்யாணப் பெண் எங்கே? எனக் கேட்கும் நிலையும் வரக்கூடும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் நிறை கூடுதல் என்பது கொஞ்சமும்கூடாது. அப்படி நிறைகூடிய பெண்ணாக இருந்தால், முதலில் அதைக்குறைக்கத் தேவையான முயற்சிகளைச் செய்யவேண்டும்.

புதிய காய்கறிகள், பழங்கள், கீரைகள் அன்றாடம் தவறாமல் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் குடிக்கவேண்டும். இதனால் உடலில் சேரும் கழிவுகள், உடலில் தங்காது எளிதாக வெளியேற்றப்படும். உண்ணும் உணவில் நச்சுத்தன்மை கொண்டவை இருந்தாலும், இப்படி நாம் குடிக்கும் நீரினால் அவை உடலில் தங்காமல் தானாக வெளியேறிவிடும்.

தேவையில்லாமல் வெயில் நேரத்தில் வெளியில் செல்லவேண்டாம். அப்படியே செல்லநேரிட்டாலும், சன் ஸ்கிரீன் லோஷனையை உடலில் சூரியஒளி நேரடியாகப்படும் இடங்களில் தடவிக்கொண்டு செல்லவேணடும். தினமும் இரவில் நேரத்தோடு படுக்கச்செல்வதுடன், நன்கு உறங்கவும்வேணடும். தூக்கம் குறைவு, கணினி, ரீவி திரைகளின் முன்பு அதிகநேரம் உட்கார்ந்து கண்களுக்கு மிகவும் வேலை கொடுப்பதை நிறுத்துங்கள். இதனால், கண்கள சோர்ந்து போவதுடன் கண்களை சுற்றி கருவளையம் ஏற்படும். இதனால் ஆரோக்கியத்துடன் அழகும் கெட்டுவிடுகிறது.

நீண்டநேரம் உட்கார்ந்தபடியே பணிபுரிய வேண்டிய நிலையில் உள்ளவர்கள், அவ்வப்போது சற்று எழுந்து உலாவுதல் வேண்டும். கூடுமான வரை பகல் தூக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.

கூந்தல் பராமரிப்பு என்பது இந்தக் காலகட்டத்தில் மிகமிக அவசியமான ஒன்று. கணினிமூலம் தலைமுடி என்ன வகையைச் சார்ந்தது என்பதை துல்லியமாக அறிவதுடன், என்ன வகையான தலையலங்காரம், எந்த நிறத்தில் தங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை பார்த்தே பெண்கள் தேர்வு செய்துகொள்ளமுடியும்.

முடிஉதிர்வு இருந்தால் அதற்கு காரணம் என்ன ஏன்? இளநரை பரவாமல் தடுப்பது எப்படி போன்றவைகளை பற்றி முதலில் ஒரு அழகு கலை நிபுணரிடம் கலந்தாலோசிப்பது நலம். இவைகளுக்கு ஆயுர்வேத முறையில் எளிய சிகிச்சைகள் உண்டு.



# பெண் ஒரு பெயர் வெட்டி

**யாழ்.பல்கலைக்கழக நூலக அலுவலகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராகப் பணிபுரியும் விமலாம்பிகை நாகேஷிடம் நேர்காணல் ஒன்றுக்காக சென்றோம். தனது அனுப வங்களை பகிர்ந்தளித் தார்.**

புங்குடுதீவினைப் பிறந்து, வளர்ந்த இடமாகக் கொண்ட நான், எனது அம்மாவின் உறவுகள் யாழ்ப்பாணத்திலே கூடுதலாக இருந்ததினால், யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருவில் வசித்துவந்தோம். பின்பு இடப்பெயர்வில் வீட்டினை இழந்ததினால், பல இடங்களிலிருந்து, இப்போது திருநெல்வேலியில் இருக்கின்றேன்.

வீட்டுக்குப் பக்கத்தில், யாழ்.நூலகம் இருந்ததினால், அங்கே சென்று வேலை செய்ததுடன், விரும்பிய புத்தகத்தை விரும்பியவர்களுக்கு எடுத்துக் கொடுப்பதில் நான் திருப்தி கண்டேன். மீண்டும் வேம்படி மகளிர் கல்லூரியில் ஒன்றரை வருடங்கள் நூலக உதவியாளராகப் பணிபுரிந்தேன். எனது எழுத்துத் திறமையையும் இங்கே தான் வளர்க்கமுடிந்தது.

உயர் கல்வியை முடித்துவிட்டு, அதே நேரம் தொழில்நுட்பக்கல்லூரியில் **Library Association Course** இனை முடித்தேன். பின்பு தமிழ் நாட்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் M.S.C.படித்துவிட்டு, இங்கே வந்து வேலை செய்கின்றேன்.

பல்கலைக்கழக நூலக அலுவலகத்திற்கு வேலைக்காக வந்து, ஒன்பது வருடங்கள் முடிகின்றன. முதன்முதலில் இங்கே வரும்போது, நூலக உதவியாளராகத்தான் சேர்ந்தேன். எனக்கு இந்தத் தொழிலில் சிறுவயதிலிருந்தே ஆர்வமும் விருப்பமும் இருந்ததினால், நூலகராக வரவேண்டும் என்பதுதான் எனது குறிக்கோளாக இருந்தது. அப்படியே நடந்தும் விட்டது. 1997 ஆம் ஆண்டுதான், சிரேஷ்ட உதவி நூலகராக என்னைத் தெரிவுசெய்தார்கள்.

எந்தத் தொழிலிலும் உண்மையான ஈடுபாடு இருந்தால்தான், அதனோடு ஒட்டிப் போகமுடியும். இந்தத் தொழிலினை நாங்கள் பாடமாக நினைத்துவந்தால், கஷ்டமாகத்தான் இருக்கும். பெண்கள்தான் கூடுதலாக நூலகத்தில் தொழில் புரிகின்றார்கள். பொறுப்புடனும், நிதானத்துடனும், பாராமரிப்பிலும் செயற்படுவது பெண்கள் தான். அதனால்தான் என்னவோ, கூடுதலான பெண்கள் இங்கே வேலைசெய்கின்றார்கள்.

சிறுவயதில் வானொலியில் - வானொலி மாமா என்றொரு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும். அதற்குநான் கட்டுரைகள் எழுதி, அனுப்பினேன். மாணவர் உலகம், புதிய உலகம் சஞ்சிகையிலும் எழுதினேன். சமூக நடுநிலையம் என்ற சஞ்சிகையில் முழு மனித உரிமைகள்தான் அவர்களுடைய உள் நோக்கம். அதிலும் கட்டுரைகள் எழுதியி ருக்கின்றேன். நான் - என்ற உளவியல் சஞ்சிகை - அதிலும் எழுதியிருக்கின்றேன்.

கவிதைகளும் எழுதும் திறமை எனககு இருக்கின்றது. எழுதிய கவிதைகளில் நல்ல கவிதையாகச் சென்னையில் வெளிவரும் நந்தன் என்ற புத்தகத்தில் எழுதியிருக்கின்றேன். நிரந்தர முகவரி நா.விமலாம்பிகை, யாழ்ப்பாணத்திலிருந்து... என்ற தலைப்பில் எழுதினேன்.

அடக்குமுறைக்குள்ளே, இருக்கும் எதுவும் வெளியேவரவேண்டும். அந்த அடிப்படையில் பெண்விடுதலை, சாதி என்ற பாகுபாட்டில் எந்த மனிதர்களும் ஏதோவொரு காரணத்தால் தாக்கப்படுகின்றார்கள். உண்மையான தகுதிகள், திறமைகள் என்பன காரணமாக இருக்கலாம். அல்லது சாதியாக இருந்தாலோ, பெணகளாக இருந்தாலோ, பணம் இல்லை என்பதற் காகவோ ஏதோவொரு காரணத்தினால் மனிதன் தாழ்ந்து போகின்றான் என்று சொல்லி, நந்தன் புத்தகத்தில் நான் எழுதிய கவிதையைத் தருகிறேன்.

**எங்களுக்கென்று முகவரி இருந்தது**
**நிரந்தர முகவரி.**
**அருச்சுனா வீட்டு கிரிபத்தை நானும்**
**எங்கள் வீட்டு பால் பொங்கலை அவனும்**
**ரசித்து சுவைத்த காலம் ஒன்றில்**
**எங்களுக்கென்று முகவரி இருந்தது.**

**இனப்பிளவு என்ற சூறைக்காற்றினால்**
**பூமிப் பந்தின் எல்லாத்திக்கிலும் வீசப்பட்டன**
**எம் முகவரிகள்.**

**எனக்கோ பல முகவரிகள்**
**நிரந்தரம் என நான் நினைத்த முகவரி**
**குண்டு வீச்சில் குழைந்து போனது.**
**தேர்ந்து கொண்ட அடுத்த முகவரி**
**பாதுகாப்பரணின் பற்களில் அமைந்ததனால்**
**பாதுகாப்பற்றதாய் கைவிடப்பட்டது.**

**இதுதான் இறுதி எனத் தேர்ந்த முகவரி**
**இடப்பெயர்வில் நிகழ்வாய் எனதற்றுப்போனது...**

இவைகள் என் ஞாபகத்தில் இருந்த வரிகள்.

குடும்பம் ஒரு இயற்கை நோக்கு என்று பெரிய உலகம் புத்தகத்தில் ஒருவர் எழுதினார். குடும்பம் என்றால் மாற்று சிந்தனைக்கு அப்பாற்பட்டது. அதுசரி என்று அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் எழுதும்போது, அதில் நான் உதவி ஆசிரியராக இருந்துகொண்டு என் பெயரில் எழுதமுடியாது. அதுதான் அம்பி எனற புனைபெயரில் தவறான சிந்தனைகளைச் சுட்டிக்காட்டி எழுதினேன். அன்புள்ள அம்மா என்ற கடிதம் ஒன்றினை பத்திரிகையில் எழுதினேன். அம்மாவிற்கு நல்ல சிந்தனையுள்ள கருத்துக்களைச் சொல்வதுபோல் உட் கருத்து அமைந்துள்ளது.

சமூகவிடுதலைதான் பெண்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. சமூகம் என்று சொல்லும்போது, குடும்பம் என்ற அமைப்பு ஜனநாயகப்படுத்தப்படவேண்டும். பொம்பிளை என்று பின்னுக்குச் சொன்னால் எனக்குப் பிடிக்காது. அதாவது, பெயர் வெட்டி என்னதான் சொன்னாலும், நீ பெயர் வெட்டி. அப்படி ஏன் சொல்லுகிறீர்கள். பெண்கள் எவ்வளவுதான் படிச்சிருந்தாலும், எவ்வளவுதான் உயர்வாய் இருந்தாலும் திருமணமான பின்னாலே தன்னுடைய பெயரை வெட்டி, கணவனின் பெயரினை முன்னுக்கு பதிந்துவிடுவார்கள். மாப்பிளை வீட்டுக்கு வந்தால் பெண்ணின் அப்பாவின் பெயர் இல்லாமல் போய்விடும்.

திருமணம் சந்தோசமாகச் செய்யப்பட்டதா அல்லது துக்கமாகச் செய்யப்பட்டதா அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். பெயர் போகுது. உணர்வுடன் யோசிக்கிறவர்களுக்கு கஷ்ரமாகத்தான் இருக்கின்றது.

ஆண் என்பவன் எந்தவொருகட்டத்திலும் தான் தனனுடைய பெயரினை இழப்பதில்லை. ஆனால், பெண் தன்னுடைய பெயரினை இழக்கின்றாள். உணர்வுக்கு அப்பால் பல விஷயங்களைச் செய்துகொண்டிருக்கின்றோம். இது பெண்களுக்குப் பெரிய இழப்புத் தான்.

நான் இன்னாருடைய மகள், இன்னாருடைய மனைவி என்று சமூகத்தில் அடையாளப்படுத்துகின்றாளே ஒழிய, நான் நானாக அடையாளப்படவில்லை. அதை நான் உணர்கின்றேன்.

இது சம்பந்தமாக யாருடனும் கதைத்தாலும், பெயர்தானே இருந்துவிட்டுப் போகட்டும் என்று அலட்சியமாய் விடுகின்றார்கள்.

அதற்குள் இருந்து பெரிய விடுதலை பெண்களுக்கு வருகின்றதென்றில்லை. என்னை நானே அடையாளம் காணத்தெரியவில்லை. பெண் ஆனவள் நிறைய ஆண்களுக்கு எது எனனுடைய சுவை, எது எனனுடைய நிறம், எது எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லத்தெரியவில்லை. முதல் தங்களை உணரத் தெரியாத ஆண்கள் - பெண்ணும் தன்னை உணரவில்லை ஆரம்பகாலத்தில சாத்திரங்கள் சொன்னது, இன்றைக்கு விளம்பரங்கள் சொன்னது என்று இந்தக்காலப் பெண்கள் அதற்குப் பின்னேதான் சென்றுகொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் பெண் இருக்க வேண்டும், இப்படித்தான் பழகவேண்டும் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அப்படித்தான் இருக்கிறேன். அறம் சாராமல் பிழையாய் போகின்றேன் போல் இருக்கின்றது. அப்படிப் போகின்றது பிழை எனச் சொல்கின்றேன்.

நானும் படிச்சு வரும்போது சிந்திக்கிறேன் தானே. சிகரெட் குடிப்பதற்கு உரிமை வேண்டவே வேண்டாம் மது குடிப்பதற்கு உரிமை வேண்டவே வேண்டாம். நியாயமான நல்ல விடயங்களை நான் நடைமுறைப்படுத்தும் போது, தடைகள் இருக்கக்கூடாது.

பெண்கள் முதல் தன்னைத்தானே உணர வேண்டும். தன்னைத்தானே உணர்வதென்பது, தற்போது நடைமுறையில் இல்லாமல் இருக்கின்றது. நான் சிந்தித்த பலவிடயங்களை நடைமுறைப்படுத்தும்போது, என்னைச்சுற்றி நிறையப்பேர் சிந்திக்காமல் இருக்கின்றார்கள். இது சரியானதொரு பிரச்சினையாகும். சில விடயங்களை நான் சிந்தித்தேன் என்றால், என்னோடு ஒத்த சிந்தனையுள்ள கூட்டத்தில்



விமலாம்பிகை நாகேஷ்

நான் நிற்கவேண்டியிருக்கிறது. தனியே நிறபது என்ற மனச்சோர்வையும், சலிப்பையும் என் வாழ்க்கையில் கூடுதலாக நான் அனுபவித்திருக்கின்றேன்.

கொஞ்ச நாட்கள் நிலையாகத்தான் இருந்தேன். இப்போது வாழ்க்கை ஓட்டத்தால் ஒன்றாகிப்போகின்ற எல்லோரின் பின்னும், நானும் தொடர்ந்து போவதா அல்லது போகாமல் விடுவதா, இல்லை போகாமல் நிற்கத்தான் போகின்றேன் என்றால், எனக்கு இந்தப் பக்கம் பலமான கூட்டணி ஒன்றுவேண்டும். அது ஆணாக இருந்தாலும் வேண்டுமென்றுதான் நினைக்கிறேன்.

ஆத்மா சஞ்சிகை குழுவினரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் சொன்னார்கள் - தாங்கள் ஒரே சிந்தனையுள்ள அந்தச் சக்தியை தங்களுடைய குழுவிற்குள் இருந்து பெறுகின்றோம் என்று. அது நல்லது போல இருக்கின்றது. வித்தியாசமாகச் சிந்தித்து ஒன்று சொன்னால், உண்மையாகவே நாங்கள் போலிச் சிந்தனைக்காரர் என்று சொல்லுவார் கள் ஆனால், உண்மையில் பொய் இல்லை- அப்படியானவர்களோடு கூடும்போது நட்போ கனமாக இருக்கிறது.

கட்டற்ற சுதந்திரம் ஒன்றையும் நான் கேட்கவில்லை. நினைத்ததை நினைத்தவுடன் செய்வது அப்படி நான் கேட்கவிலலை. குடும்பம் என்று எடுத்தால், குடும்பத்துக்குள்ளே ஒரு ஜனநாயகத் தன்மை இருக்க வேண்டும். 'மனுசி' என்று எடுத்தால் உணர்ந்துகொள்ள நாங்கள் யார்? என்ற ஆதிக்கம் எல்லா இடமும் இருக்கின்றது. இந்த நிலைமாறவேண்டும்.

யாழ்ப்பாணக் குடும்பங்களில் - அன்பும், புரிந்துணர்வும், பரஸ்பர நட்பும் நிறைய விடயத்தைச் சாதிக்கின்றது. எந்தப் பிரச்சினையும் நியாயமானரீதியில் இருபாலாருக்கும் தீர்க்கப்படுமாயின், நல்ல நிலைப்பாடு உருவாகும்.

தொலைக் காட்சியிலும், விளம்பரத்திலும் வந்த விடயங்கள் ஆரோக்கியமானதென்று நமபி, இதிலிருந்து விடுபடமுடியவில்லை. பெணகளால் இதை மாற்றிக்கொள்ளவேண்டும்.

ஆடி அமாவாசை விரதம் பிடிக்கக்கூடாது தாலிகட்டின பெண்கள் என்று சொல்வார்கள். விரதம் பிடித்தால் கணவனுக்குக்கூடாது என்றும் மூடநம்பிக்கையைப் பின்பற்றி வருகிறார்கள். குடும்பம் என்ற அமைப்புக்குள் ஆண என்று ஒரு ஆள் தலைவராக இருக்க வேண்டும் என்றும், மற்றைய பெண் என்ற ஆள் உதவியாக இருக்கவேண்டும் என்றும், உதவியாக கீழே பெண்ணை இருத்தியிருக்கிறார்களா.

பூப்புனித நீராட்டுவிழா பெண்களுக்கு தேவையில்லாத ஒன்று. ஆனால், அந்த சடங்கிற்கு உறவினர்கள் அழைப்புக் கொடுத்தும் போகாமல் இருந்தால், அந்தச் சமூகம் - போகாதவர்களை விலக்கிவைத்துவிடும். இதன் காரணமாகப் போகவேண்டியிருக்கின்றது. ஆணுக்கு மீசை வளர்ந்ததற்குச் சடங்கு வைகலாம்தானே. இந்த சமூகம் ஏன் அதைச் செய்யவில்லை.

பெண்களை வேலைக்கு அனுப்பக் கூடாது. வீட்டிலே இருக்கவேண்டுமென்று ஒவவொருவரும் ஒவ்வொருவிதமாக பார்க்கின்றார்கள். ஆனால், அவளைப் பெற்ற அப்பா மாத்திரம் தன்பிள்ளை கஷ்ரப்படக்கூடாது என்று பார்க்கிறார். எத்தனை பேர்களின் கண்கள், எத்தனையெத்தனை விதமாகப் பெண்களைப் பார்க்கின்றார்கள். சிலர்களின் கண்ணினை மூடுவதற்காவது, பெண்களை உலகத்தைச் சுற்றி அடிபடவிடவேண்டும்.

**நேர்காணல்:-**
**பூ.நதுலன், செல்வா**

# வீடு அழகாகக் காட்சியளிக்க

ஒரு பெண்ணுக்கு மிக அழகாக முகத்துக்குப் பவுடர் போட்டு, கண்ணுக்கு மை தடவி, பளிச்சென்று பொட்டு வைத்துவிட்டு, தலையை மட்டும் சீவாமல் அப்படியே விட்டுவிட்டால், இவ்வளவு தூரம் செய்த



அலங்காரமும் எடுபடாமல் போகுமோ...

அப்படித்தான் வீட்டுக்கான தரை மற்றும் சுவர் அலங்காரம், சோபா, திரைச்சீலை என்று பார்த்துப்பார்த்துபோட்டாலும், மேலே சீலிங் இல்லை என்றால் வீட்டின் அழகே அரைகுறையாகத் தெரியும்.

அதனால்தான், நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகளும், அழகும் கொஞ்சும் கோயில்களில் அந்த அழகை ஈடுசெய்யும் விதமாக, கோயிலின் மேல்கூரை அமைய வேண்டும் என்று அவற்றுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அழகழகான சித்திரங்களைத் தீட்டினார்கள் நம் முன்னோர்கள். அதற்காக வீடுகளிலும் நாம் மேற்கூரையில் வண்ண வண்ணமாக சித்திரம் தீட்டவேண்டுமென்பதில்லை.

கோயில்கள் என்பது பெரிய பிரதேசத்தில் அமைந்திருக்கும் கட்டடங்கள் என்பதாலும், சுவர் பின்னணியும் கருங்கல் நிறத்தில் என்பதாலும், அந்த இடத்திற்கு நிறம் சேர்ப்பதற்காக மேல் கூரையை நிறத்திலே அமைத்தார்கள்.

வீட்டிற்கு நிறக் கம்பளங்கள், சோபா, திரைச் சீலைகள், தரை விரிப்புகள், பூக்கள் என்று வைத்துவிட முடியுமே...!

அதனால், மேல்கூரை விடயத்தில் எமக்கு தேவை - அழகான நல்ல மின்குமிழ்களுக்கான நேர்த்தியான அமைப்புக்கள்...!

இந்த விதமான அழகைத் தருவதற்காகத்தான் தற்போது பிரபலமாகி வருகின்றன சீலிங் என்ற செயற்கைக் கூரைகள்.

இன்று அநேகமாக எல்லா அலுவலகங்களிலும் இந்த சீலிங்கை நீங்கள் பார்க்க முடியும். குறிப்பாக எயர்கண்டிஷன் உள்ள அறைகளில் கட்டாயமாக இருக்கும்.

அதற்காக இது அலுவலகங்களுக்கும், எயர் கண்டிஷன் அறைகளுக்கும் மட்டும் தான் சரி என்று நினைத்துவிடக்கூடாது. வீடடின் மேல்கூரையில் ஆங்காங்கே ஈரக் கசிவு, லேசான விரிசல் என்று அமைந்து விடாமல் இருப்பதற்கு உதவுகின்றது. வீட்டின் எந்த அறையையுமே மேலும் பொலிவாக்குகிறது. பளபளப்பான அதன் கூரைகளில் வெளிச்சம் படும்போது, வெளிச்சம் அறைமுழுக்க இன்னும் கூடுதல் பிரகாசத்துடன் தெரியும்.

தவிர, இதுபோன்ற சீலிங் - அறையின் வெப்பத்தையும் கட்டுப்படுத்துகிறது. வெயில் காலங்களை அதிகமாகக் கொண்ட எமக்கு, இந்தவிடயம் காதில் தேன் பாய்கிற மாதிரி. அதிலும் மொட்டை மாடிக்குக் கீழேயுள்ள அறைகளில் அனல் கொதிக்கும் வெப்பத்தைக் கட்டுப்படுத்த இது மிகவும் உதவும்.

ஏ.சி.அறைக்கு இந்த சீலிங்கை கட்டாயம் போடுவது நல்லது. அறைகளுக்குக் கவர்ச்சி மட்டுமல்ல ஏ.சிக்கான மின்சார செலவும் மிச்சமாகும்.

ஏ.சி. இல்லாதவர்கள்கூட, வீட்டின் மற்ற அறைகளுக்குப் போடமுடியாவிட்டால், படுக்கை அறைக்கும், வரவேற்பறைக்கும் மட்டும் போட்டுக்கொள்ளலாம்.

(தொடரும்....)

# இந்த வார பலன்கள்

## 23.01.2004 – 29.01.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் | ராகு | | சனி |
| சுக் யுரே | 23 மா.5.03 கும்-சந்<br>24 இ. 1.08 மே-செவ்<br>25 இ. 9.53 மீன-சந்<br>27 பி.கு 6.47 மே-சந் | | |
| சூ.சந் நெப் | | | குரு |
| புத | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியினருக்கு இவ்வாரம் மத்திமமான பலன்கள் காட்டும். அதை நிதானமாக ஆலோசித்து செய்வது நன்று. தொழில் வருவாய் ஓரளவு நன்று. வீண் விடயங்களில் பிரவேசிக்காமல் இருப்பது நன்று. குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் தோனறக்கூடும். செலவுக்கேற்ப பொருள் வரவு கிடைக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் தாமதத்தின் மேல் நடக்கும். தேகாரோக்கியம் அதிகம் பாதிப்படையாது. உங்கள் ராசிக்கு குருபார்வை இருப்பதால், கஷ்டங்கள் நிவர்த்திசெய்யும். உத்தியோகத்தர்களுக்கு ஊக்கமும், செய்தொழிலில் கூடிய அக்கறையும் காணப்படும். உயரதிகாரிகளின் நன்மதிப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நல்லமுறையில் நடக்கும். பணமும் சேரும். வங்கிநிலை திருப்தி தரும். மாணவர்கள் முன்னேற்றமடைவர். பரீட்சைப் பெறுபேறுகள் நன்று.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு சிறப்பான பலன்கள் குறைவாகவே இருக்கும். முயற்சி கூடுதலாக இருப்பினும், வருவாய் குறைவாகவே இருக்கும். இனத்தவர்களாலும், பிள்ளைகளாலும் செலவுகள் கூடுதலாக இருக்கும். மனதில் நிம்மதிக்குறைவு காணும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின்மேல் வெற்றியளிக்கும். உடல் ஆரோக்கியம் சற்றுக் குறைவாகவே அமையும். தேகநிலையை அவதானித்துக் கொள்ளுதல் நன்று. திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் தாமதப்படும். தூரதேசப் பிரயாணம் முதலியன மீண்டும் தாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும், தமது சாமர்த்தியத்தால் நிறைவு செய்துவிடுவர். வர்த்தகர்களுக்கு புதிய உத்திகளைக் கையாண்டால் இலாபமுண்டு. புதிய முதலீடுகளுக்கு ஏற்ற காலமன்று. மாணவர்கள் முயற்சிக்கேற்ப சித்திகள் அமையும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இந்த ராசியில் பிறந்தவர்களுக்குப் பொதுவாகப் பலன்கள் நன்றாக இருப்பினும், சில பின்தங்கிய நிலைகளும் ஏற்படும். தொழில் முயற்சிகள் நன்றாக அமையும். தேவைக்கேற்ப வருவாய் கிடைக்கும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினை இருக்கும். எனினும், குடும்பத்தில் மனமகிழ்ச்சி, சுபீட்சம், ஓற்றுமை என்பன தென்படும். குடும்பப்பெண்கள் மனநிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் காணப்படுவார்கள். திருமணம் நிச்சயமானாலும், மங்கள கருமம் காலத்தை நீடிக்கும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்திகாரிகளின் கெடுபிடிகள் இருப்பினும், கருமங்கள் சிறப்பாக நடக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக அமையும். கறுப்புச்சந்தை வியாபாரம் கூடிய பலன் தரும். மாணவர்கள் சோம்பல் தனத்தால் முன்னேற்றம் குறைவாக இருக்கும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு இவ்வாரம் சாதகமான பலன்கள் அமையும். குடும்பவாழ்வு திருப்திகொடுக்கும் குடும்பத்தில் புரிந்துணர்வும், ஒற்றுமையும் வலுக்கும். பிள்ளைகளால் பெருமையும், கௌரவமும் உண்டு. வெளிநாட்டிலிருந்து பணவருவாய் கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறலாம். தேகாரோக்கியம் பாதிப்படையாது. தனித்தொழில் புரிவோருக்கு நிறைந்த் வருவாய் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுகளைக் காட்டும். உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். பலவித வசதிகளையும் பெறுவர். வியாபாரிகள் தமது பழைய முதலீடுகளைவிற்று, அதிக பணம் சேகரிப்பர். புதிய வாடிக்கையாளர்களும் சேருவார்கள். ஏஜென்ஸி தொழில் புரிவோர் - எதிர்பாராத இலாபம் பெறுவர். மாணவர்களுக்குப் பரீட்சைப் பெறுபேறுகள் நன்றாக அமையும். சிலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கலாம்.

### சிங்கம்

*(மகம, பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*



இவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்களே நடக்கும். எல்லாக் கருமங்களிலும் நிதானமும், கவனமும், எச்சரிக்கையும் தேவை. குடும்பத்தவர்களுக்கு ஒற்றுமையும், நல்ல மனப்பான்மையும் தென்படும். பணவரவு தேவைக்கேற்ப கிடைக்கும். எனினும், தேகசௌக்கியக் குறைவால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். உறவினர்களாலும் மறைமுக இடையூறுகள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் முடிவின்றிப் பின்தள்ளிக்கொண்டு போகும். கடின உழைப்பு முதலியவற்றால் கஷ்டம் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்கள் கூடிய வேலைப்பழுவால் கருமத்தைச் சமாளிக்க முடியாமல் தத்தளிப்பர். சுயதொழிலாளரின் உதவியும் கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையாகவே இருக்கும். அரச வங்கி உதவிகள் தாமதமடையும். மாணவர்கள், நண்பர்களுடன் கூடி வீண்பொழுது கழிப்பர். கவனம் செலுத்தினால் முன்னேற்றமுண்டு.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசிக்காரருக்கு இவ்வாரம் எல்லா விடயங்களிலும் கவனமும், அவதானமும் வேண்டும். குடும்ப அங்கத்தவர்களிடையே சிறு பிணக்குகள் தோன்றும். பொறுமையைக் கைக்கொண்டால், கோபதாபமின்றி வாழ்க்கை உருளும். தொழில்மூலம் கிடைக்கும் வருவாய் - செலவுக்குப் போதாமல் இருக்கும். மேலதிக செலவுகளுக்குக் கடன்வாங்க நேரும். பெண்கள் வீட்டுச்செலவுகளைச் சமாளிக்கக் கஷ்டப்படுவார்கள். புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் பேரும்புகழும் சம்பாதிக்கலாம். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு காலதாமதம் ஏற்படும். புதுத் தொழில்களில் ஈடுபடுவோருக்கு இன்னும் காலம் கனியவில்லை. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். சமாளிக்க முடியாமலிருப்பர். மேலதிகாரிகளை அனுசரித்துச் செயற்படுவது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். சரக்குகளில் முடக்கம் ஏற்படலாம். மாணவர்கள் மனதில் குழப்படைவார்கள். மனதை ஒருவழிப்படுத்துதல் நன்று.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவ்வாரம் பலவகையிலும் உங்களுக்கு நற்பலன் கொடுக்கும். தொழில் சிறப்படையும். பலவகையாலும் வருவாய் அதிகரிக்கும். புதிதாகப் பொருட்கள் வாங்குவதில் பெண்கள் கூடுதலாக ஈடுபடுவார்கள். உறவினர்களாலும், நண்பர்களாலும் பல உதவிகள் உண்டு. வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள்மூலம் பணவருவாய் கிட்டும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் காணப்படுவார்கள். தனித்தொழில்கள் புதிய பரிமாணத்துடன் வளர்ச்சியடைந்து, கூடிய இலாபம் கிடைக்கும். திருமணப் பேச்சுக்களில் புதிய திருப்பமும் அனுகூலமும் ஏற்படலாகும். உத்தியோகத்தர்கள் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்து மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வசதியான இடமாற்றமும், உயாச்சியும் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் வெகுசிறப்பாக நடக்கும். நிறைந்த இலாபம் கிட்டும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றங்களும், தேர்ச்சியும் உண்டு.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு இவ்வாரம் குறைந்த நற்பலன்களே நடக்கும். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் தோன்றலாம். தொழில் பிரயாசைக்கேற்ப வருவாய் கிடையாது. கணவன் - மனைவியிடையே நல்லிணக்கம் இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் கசப்புணர்வுகள் தோன்றும். புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படக்கூடும். வைத்தியச் செலவுகளும், தலைதூக்கும். புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதில் கஷ்டங்கள் இருக்கும். திருமண நிகழ்வுகள் இழுபறி நிலையிலிருக்கும். நண்பர்கள் உதவிபுரிவார்கள். உத்தியோகத்தர்களுக்கு வசதி குறைந்த இடமாற்றங்களும், வேலைச் சுமையும் சமாளிக்கவேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கு தொழில் மந்தநிலையையே காட்டுகிறது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு. ஊக்கமெடுத்தல் நன்று.

### தனுசு

*(மகம், பூராடம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு பல நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. குருபகவான் உங்கள் ராசியை நோக்குவதால் நற்சிந்தனையும், நினைத்த கருமங்கள் விரைவில் கைகூடுவதும் உண்டாம். தொழில்மூலம் நல்ல வருவாய் பெறமுடியும். உறவினர்களால், பிள்ளைகளால் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், செல்வாக்கும் நிலவும். மனைவி மக்கள் நல்ல ஆலோசனைகளைத் தந்து பக்கபலமாக இருப்பர். ஆரோக்கியம் நன்கு அமையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். உத்தியோகத்தர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பணியாற்றுவர். மேலதிகாரிகளின் மதிப்பைப் பெறுவர். வியாபாரம் சிறப்பாக அமையும். நல்ல வருவாய் கிடைக்கும். வாடிக்கையாளர் கூட்டம் பெருகும். மாணவர்கள் தெளிவான சிந்தனையுடன் பாடங்களில் முன்னேறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு இவ்வாரம் பல சோதனை நிகழ்வுகள் ஏற்படலாம். எந்தச் செயற்பாட்டிலும் நிதானம், கவனம், முன்னெச்சரிக்கை தேவை. குடும்பத்தில் அமைதிக்குறைவு, சிறு தகராறுகள் தோன்றலாம். தந்திரமாகக் கையாணடால் பிரச்சினைகள் எழாது. வரவுகள் ஓரளவு வந்தாலும், செலவுகள் அதை மிஞ்சிவிடும். குடும்பப் பெண்கள் மனம் தெளிவற்றுக் காணப்படுவர். பேசும்போது நிதானத்துடன் பேசவேண்டும். திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனமும், ஊக்கமும் செலுத்தவேண்டும். சிலருக்குப் பிரயாணங்கள் அலைச்சலைத் தரும். வியாபார நிலை மந்தமாகவே இருக்கும். வங்கிக் கடன்கள் தாமதப்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய ஊக்கம் செலுத்தவேண்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



இவ்ராசியினருக்கு இவ்வாரம் பலநன்மையான பலன்கள் காத்திருக்கின்றன. தொழில்கள் சிறப்பாக நடக்கும். பணவருவாயும் கூடுதலாக இருக்கும். புதிய பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் அதிக ஈடுபாடு இருக்கும். குடும்பத்தில் கணவன் - மனைவி ஒற்றுமை சிறப்பாக அமையும். பிள்ளைகளால், உறவினர்களால் உதவி உண்டு. வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். பிரயாணங்கள் அடிக்கடி மேற்கொள்ளவேண்டி வரும். உத்தியோகத்தர்களுக்குப் பலவித வசதிகள் கிடைக்கும். துரிதமாகவும், உற்சாகமாகவும் பணியாற்றுவர். உயரதிகாரிகள் திருப்தியடைவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். கொடுக்கல், வாங்கல்களில் திருப்தி நிலவும். பழைய கடன்கள் வசூலிக்கப்படும். மாணவர்கள் ஊக்கத்துடன் காணப்படுவர். பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்வர்களுக்கு நன்மை தீமை கலந்த பலன்களே நடக்கும். எதிலும் பொறுமையுடனும், அவதானத்துடனும் இருக்கவேண்டும். வாகனம் செலுத்துபவர்கள் விபத்துபற்றி அவதானம் தேவை.

பொருள் வரவு ஓரளவு நன்றாக இருப்பினும், செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாமலிருக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். சில சந்தர்ப்பத்தில் தேகாரோக்கியம் குறைவதால் வைத்தியச் செலவு தேவைப்படும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். தூரதேசப் பிரயாணங்களும் தடைப்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகமாகும். வசதி குறைந்த இடமாற்றம் ஏற்படலாம். வர்த்தகர்கள் புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. வியாபாரம் மந்தமாகவே இருக்கும். மாணவர்கள் விளையாட்டில் கூடிய அக்கறை செலுத்துவர்.

# அதிகரித்துவரும் ஆலயங்கள் மனிதகுல வளர்ச்சிக்கு உதவுமா

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' போன்ற முதுமொழிகள் ஆலயங்களின் அவசியத்தையும், ஆலயந்தொழுவதன் பயன்பாட்டையும் விளக்கி நிற்கின்றன.

இதற்கமையவே எமது இந்து சமயத்தவர் - தாம் சென்ற இடமெல்லாம், குடியேறிய ஊரிலெல்லாம் ஆலயங்கள் அமைத்து வழிபட்டுவந்தனர். மனச சஞ்சலத்தைத் தீர்க்கும் இடமாக, வேறுபாடுகளற்ற சமரசம் உலவும் இடமாகவிருந்த இந்து ஆலயங்களில், இன்று இடம்பெறும் சம்பவங்களால் ஆலயங்கள் தேவைதானா என்று எண்ணத்தோன்றுகின்றது.

இந்து ஆலயங்கள் பலவற்றில் உரிமை, சொத்துப் பிரச்சினை என்பன தோன்றி, நீதிமன்றம்வரை வந்துவிட்டது. பல ஆலயங்களில் இவை உட்பூசல்களாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எப்போது நீதிமன்றம் வருமோ தெரியாது.

தற்போது மதமாற்றம் வெகுவேகமாக நடைபெறும் நிலையில், எமது மதத்தை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை. இதனை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இந்துமதத்தை வளர்க்கிறோம் என்றால், அதன் அர்த்தம் என்ன? ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி புதிதுபுதிதாக ஆலயங்களை அமைப்பதா? சமய வளர்ச்சி என்பது - ஆலய வளர்ச்சி மட்டுந்தானா? ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய விடயமிது.

இந்துசமயத்தை வளர்ப்பதற்கு, அதன் நலனைக் கவனிக்கவுமென இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய அலுவல்கள் திணைக்களம் என்பன இலங்கையில் இயங்கி வருகின்றன. அவை செய்ய வேண்டிய உண்மையான, பணியென்ன? ஆலயங்களைப் பதிவுசெய்து, அவற்றைப் புனரமைப்பதற்கென நிதியுதவிகள் வழங்குவது மட்டுந்தானா. ஓர் ஆலய நிர்வாகியுடனோ அல்லது அந்தச் சூழலில் உள்ளவர்களுடனோ ஏற்படும் கருத்துமோதல்களால், உடனே அருகில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டுவிடும். ஏட்டிக்குப்போட்டியாக இந்த ஆலயங்கள் வளர்க்கப் பட்டும்விடும்.

இன்று ஒரே ஊரில் குறிப்பிட்ட தூர எல்லைக்குள் அல்லது அருகருகேகூட ஒரே ஆலயங்கள் அமைந்துள்ளமை இதற்குச் சான்றாகும். அதுமட்டுமன்றி, தனிப்பட்ட ஒருவர் தனது சுயதேவைக்காக தனது வீட்டிலோ அல்லது தனது வெற்றுக் காணியிலேயுள்ள ஆலமரம், வேப்பமரம், அரசு, புளியமரத்தடியிலோ ஒரு சூலத்தை நட்டுவைத்து, இது ஆலடி வைரவர், புளியடி வைரவர் என்று பெயர் சூட்டி வழிபட்டுவருவா. இவ்வாறு அமைக்கப்பட்ட பல மரத்தடி ஆலயஙகளை இன்று நமது ஊரின் பலபாகங்களிலும் காணமுடியும்.

போட்டி, பொறாமை காரணமாகப் புதிதாக உருவாக்கப்படும் ஆலயத்தாலும், வரட்டுக் கௌரவம் காரணமாக அடுத்த கோயிலைப்போல எமது கோயிலையும் வளர்க்கவேண்டும் என்பதற்காகப் பெரிதாக்கப்படும் ஆலயங்களாலும் இந்து சமயத்திற்குக் கிடைக்கப்போகும் பயன் என்ன? ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது. இந்து சமயம் வளர்க்கப்படல் வேண்டுமாயின் இந்துசமயக் கொள்கைகள், சிறு வயதுமுதலே எம்மவர் மத்தியில் பரப்பப்படல்வேண்டும். இன்று தேவைக்கு மேற்பட்ட ஆலயங்கள் நம் நாட்டிலுள்ளன. இனிமேல் எங்கும் ஓர் ஆலயம் புதிதாக அமைக்க வேண்டிய தேவை ஏற்படாது எனக் கருதுகின்றேன். அவ்வாறு உருவாக்கப்பட வேண்டுமாயின், இந்து கலாசார அமைச்சினது அனுமதி கோரப்படும் போது, அமைச்சு பின்வரும் நிபந்தனைகளை முன்வைத்தல் நலன்பயக்கும். - **ஆலயம் அமைக்க உத்தேசக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து குறைந்தது மூன்று மைல் சுற்றாடலுக்குள் எந்தவொரு இந்து ஆலயமும் இருத்தல் கூடாது. அவ்வாறான மூன்று மைல் சுற்றாடலுக்குள் குறைந்தது 500 குடும்பங்களாவது இந்து மதத்தவர்களாக இருத்தல் வேணடும். ஆலயத்தைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்கும் பேணுவதற்கும் ஏற்ற பொருளாதார வசதியைக் கொண்டிருத்தல் வேணடும்.**

மேற்குறிப்பிட்ட விடயங்களை அமைச்சு அதிகாரிகள் நேரடியாகச் சென்று ஆராய்ந்த பின்னரே பதிவுசெய்தல் வேண்டும். அமைச்சினால் நிதியுதவி வழங்கப்படுகின்றது என்ற ஒரே காரணத்துக்காக - வீட்டு வளவுகளிலும், அரசடி, ஆலடி, புளியடி, வேம்படிகளிலும் அமைந்திருக்கும் சிற்சில ஆலயங்களும் உடனடி நிர்வாக சபை அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு நிதியுதவி பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான செயறபாடுகளை அமைச்சு அதிகாரிகள் இனங்கண்டு தவிர்த்தல் வேண்டும்.

இந்த ஆலயங்களுக்குச் செலவிடப்படும் பணத்தை, ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆலயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆலயங்களில் பின்வரும் செயற்பாடுகளைச் செய்வதற்குப் பயன்படுத்தலாம்.

**1. அருகிவரும் புராணபடனம், பண்ணிசை போன்றவற்றிற்கு வகுப்புகள் நடாத்தி, இளவயதினருக்குப் பயிற்சியளிக்கலாம்.**
**2. வறிய மாணவர்களின் கல்விக்காகப் புலமைப் பரிசில்களை வழங்கலாம்.**
**3. இந்து சமயம் தொடர்பான கலை நிகழ்வுகளை நடத்தலாம்.**
**4. இளைஞர் - யுவதிகளுக்கான பயன் மிக்க பல்வேறு பயிற்சிகளை அளிக்கலாம்.**
**5. அறிஞர்கள், கலைஞர்களது சொற்பொழிவுகளை நடத்துவிக்கலாம்.**

இவ்வாறான செயற்பாடுகளால் வெறுமனே ஆலயக் கட்டட வளர்ச்சிக்காக மட்டும் செலவிடப்படும் பணம் மீதப்படுத்தப்பட்டு, சமய வளர்ச்சிக்கான வாசல் திறக்கப்படும் தறிகெட்டு, நிலை மாறுகின்ற - வன்முறைப் பாதையில் செல்கின்ற எமது இளைய சமுதாயம் ஆலயத்தின்பால் ஈர்க்கப்படுவதால், நன்நெறிப்பட வாய்ப்புண்டு. இந்து சமயம் அழிந்துவிடாது காப்பாற்றப்படுவதோடு, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும். இந்த விடயத்தில் இந்து கலாசார அமைச்சும், பொதுமக்களும் செயற்படுவார்களா?

இந்த நிலையில் -அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்ன யாவிலும் புண்ணியம்கோடி, ஆங்கோர் ஏழைககு எழுத்தறிவித்தல் என்ற பாரதியின் பாடல் நினைவுகூரப்படவேண்டியது அவசியமானது.

**சே.சுதாகரன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

முடிவும் இடையூறும் முற்றிய ஆங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

திருக்குறள்

## நமது நோக்கு

# குழப்பும் கூட்டணியும், குழம்பும் சமாதானமும்...

'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்' என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு.

இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் முன் நகர முடியாத அரசியல் நெருக்கடி நிலையொன்று ஏற்பட்டிருக்கும் போதிலும், போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்பாடும் இன்னமும் தொடர்ந்து கடைப்பிடிக்கும் நிலை காரணமாகச் சந்தேகங்கள், அச்சங்களுக்கு மத்தியிலும் ஓர் நம்பிக்கை தொடர்வது - நேற்று முன் வரையான நிகழ்வாக இருந்தது.

இரு தினங்களின் முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் புதிய கூட்டணியொன்றை உருக்கியதையடுத்து, தற்போதைய தற்காலிக அமைதிநிலைக்கு ஆபத்து வரக்கூடியதை எச்சரிக்கை செய்யும் அபாயச் சங்குகள் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

முதலாவதாக - புதிய கூட்டணி தனது ஐந்தம்சத் திட்டத்தில் விடுதலைப் புலிகளுடனும், ஏனைய கட்சிகளுடனும் நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் மேற்கொள்ளப்படும் எனத் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக - தற்போது பேச்சுவார்த்தைகளுக்குப் பிரதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு கொண்டிருக்கும் நோர்வேயின் பங்களிப்பினை நிராகரிக்கும் தொனியில், அவர்களின் பங்களிப்புத் தேவையா எனச் சிந்திக்கவேண்டியுள்ளதாக இந்தக் கூட்டணி கருத்து வெளியிட்டுள்ளது.

மூன்றாவதாக - இதுவரைகாலமும் அரசு கடைப்பிடித்து வந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, சமாதான முயற்சிகளைத் தொடரத் தாம் தயாராக இல்லை என்றும் இந்தப் புதிய கூட்டணி தெரிவித்துள்ளது. நான்காவதாக - தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளைத் தாங்கள் கருதவில்லை என அவர்கள் மேலும் இறுக்கமாகக் கூறியுள்ளனர்.

இந்தக் கருத்து வெளிப்பாடுகள் யாவும் சமாதான சூழலுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களாகவே கணிக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போதைய சமாதானச் சூழலின் தோற்றத்தை உருவாக்க, காரணிகளாக இருந்த அனைத்தையும் இப்புதிய கூட்டணியினர் வெளிப்படையாகவே நிராகரிக்கத் தொடங்கியுள்ளமையானது - தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளைத் தொடரும் நோக்கம் அவர்களுக்கு இல்லையென்பதையும், தாம் வேறுவழியில், வேறு ஏற்பாட்டாளர்கள்மூலம், புதிய முறையில் புதிதாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் திட்டத்தையே கொண்டுள்ளார்கள் என்பதையும் தெளிவாக உணர்த்துவதாக உள்ளது.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே, இதுவரைகாலமும் சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டது என்பதை சர்வதேச சமூகம் நன்கு அறியும். முரண்பாடுகளும், அவநம்பிக்கையும் மிகுந்துள்ள நிலையில், நிபந்தனைகள் என்ற விடயம் - சிக்கலானதும் மேலும் பிரச்சினைகளை அதிகமாக்குவதாகவே அமையும் என்பதை விபரிக்கவேண்டியதில்லை.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க நிபந்தனைகளை விதிக்க நினைப்பதானது - பேச்சுக்கள் ஆரம்பிக்கும் ஆர்வம் புதிய கூட்டணிக்கு இல்லை என்பதன் வெளிப்பாடாகவே கருத முடியும்.

இந்த வருடகால அமைதிநிலையைப் பேணுவதில் நோர்வே வகித்த பங்கை நிராகரிக்க நினைப்பதானது, இதுவரை சமாதான முயற்சிக்கு அந்தநாடு ஆற்றிய பணியை அகௌரவப்படுத்துவதாகவே அமையும். இந்த சமாதான முயற்சிகளுக்கு இன்னொரு ஏற்பாட்டாளரை இடையில் கொண்டுவரமுயற்சிப்பது, இதுவரை நோர்வேயுடன் இணைந்து சமாதான நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக செயற்பட்ட சர்வதேச சமூகத்தையும் அவமதிப்பதாவே இருக்கும்.

இதுவரை கடைப்பிடித்துவந்த அணுகுமுறையை நிராகரிப்பதானது - இதுநாள்வரை பேச்சுவார்த்தை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கண்டுகொண்ட இணக்கங்கள், கையொப்பமிட்ட உடன்பாடுகள் அனைத்தையும் உதாசீனம் செய்வதாகவும், மீண்டும் ஒரு புதியமுறைப் பேச்சுக்கான அடித்தளம் இடுவதாகவுமே அமையும். அதுமட்டுமல்ல காலங்கடத்தி தமிழ்மக்களை ஏமாற்றும் தந்திரோபாய உத்தியாகவுமே இதனைக் கருத்தில்கொள்ளவேண்டியதும் அவசியம்.

பேச்சுவார்த்தைக்கான தமிழர் தரப்பின் முதன்மைப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை இதுநாள்வரை ஏற்றுக்கொண்டே - அரசும், சர்வதேச சமூகமும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துவந்துள்ள நிலையில், அரச தரப்புடன் இணைந்து செயற்படும் அமைப்புக்களை, தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாகக் கருதமுற்படுவதும், அவர்களையும் பேச்சுவார்த்தை மேசையில் தமிழர் தரப்பினராக இனங்காட்ட முயல்வதும் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும் விடயமே ஆகும். அவர்கள் பிரதான சிங்களக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டே, தமிழர் தரப்புக்கும் பிரதிநிதித்துவம் செய்வதென்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றேயாகும்.

இந்த நிலையில் இப்புதிய கூட்டணியின் உருவாக்கத்துக்கான உள்நோக்கம் தற்போதைய சமாதான முயற்சிகளை எந்த வகையிலாவது குழப்பிவிடவேண்டும் என்பதேயாகும். இதன் அடிப்படையிலேயே இக்கூட்டணியின் தோற்றம் காரணமாக மீண்டும் போர்மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கின்றார் என்றும் கருதஇடமுண்டு.

இதேவேளை, சர்வதேச சமூகம் தொடர்ந்தும் விட்டுக்கொடுப்புடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ளும் என்று இலங்கையின் அரசியல் தலைவர்கள் எதிர்பார்க்கக் கூடாது எனத் தற்போது இலங்கை வந்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளமையானது, இலங்கையன் அரசியல் தலைமைகள்மீது சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியின் வெளிப்பாடாகவே தெரிகிறது.

## நாடும் நடப்பும்




# பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் போது முஸ்லிம்களும் பங்குபற்றவேண்டும்!

## அகாஷியிடம் - ஹக்கீம் வேண்டுகோள்



சமாதானப் பேச்சுவார்த்தைகளை காலம் தாழ்த்தாது முன்னெடுக்க வேண்டும் என்றும், அந்தப் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டும் கலந்துகொள்ளாது, முஸ்லிம்களும் மாற்று அரசாங்கத்தின் பிரதிநிகளாகப் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் - ஜப்பானின் விசேட சமாதானத்தூதுவர் யசுஷி அகாஷியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கொழும்பு வந்துள்ள யசுஷி அகாஷி தலைமையிலான குழுவினர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சு செயலகத்தில் தனியாகச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் ஹக்கீம் தலை மையிலான முஸ்லிம் காங்கிரஸூம் அரசியல் அமைப்புக் குழுவினரை சந்தித்து கருத்துக்களைப் பரிமாறியபோதே, அமைச்சர் ஹக்கீம் இதனை வலியுறுத்தினார்.

அமைச்சர் ஹக்கீம் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சுவார்தைகளில் இதுவரை உள்வாங்கப்படாதது போலவே, மற்ற அரசாங்கப் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்படாததும், பேச்சுவார்த்தைகள் வெற்றிக்கு தடையாக அமைந்துள்ளது என்றும், முன்னர் மனிதாபிமான, புனர்வாழ்வு பற்றிய அம்சங்களே பெரிதும் கையாளப்பட்ட போதிலும், இனிமேல் மூலாதாரமான முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டி இருப்பதால், முஸ்லிம் பிரதிநிதிகளிடம் மாற்று அரசாங்கப் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றுவது இன்றியமையாதது.

பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளபோதிலும், வெளிநாட்டு நிதியுதவிகள் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால், அந்த நிதியுதவிகள்- வட-கிழக்கில் வாழும் எல்லா சமூகத்தினரதும் நலன் கருதி, நியாயமான முறையில் செலவிடப்படவேண்டும் என்றார்.

யசுஷி அகாஷி இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோது - ஏற்கெனவே அமைச்சர் ஹக்கீம் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாட்டை தம்மிடம் தெளிவாக எடுத்துக்கூறி இருப்பதாகவும், முன்னர் தாம் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தபோது, தம்முடன் அங்கு சென்று, நேரில் நிலைமைகளை அறிந்துகொள்ள பெரிதும் உதவியதாகவும் கூறினார்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைத் தீர்வில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட இடமளிக்கப்படாது என தாம் நம்புவதாகவும் அகாஷி தெரிவித்தார்.

# ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் நான்காவது வருடாந்த மாநாடு!

வடக்கு - கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் நான்காவது வருடாந்த மாநாடு - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நிறுவனதவிசாளர் எஸ்.யோகநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சமூகசேவை உத்தியோகத்தர் கே.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, கல்முனை மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஜனாப் ஏ.எல்.யுனைப்தீன், மேலதிக மாவட்டப் பதிவாளர் உமாபதி, கல்முனை கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், வெளிநாட்டு உதவிகளை நிறுவன உறுப்பினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குமான திட்டங்கள் தொடர்பாகவும் இந்தப் பொதுக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

இந்த நிறுவனத்தில், உறுப்பினர்களாகவுள்ளோரின் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதோடு, உறுப்பினர்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபா சுயதொழில் வாய்ப்புக் கடன்வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை தன்னோடு தொடர்பு கொள்ளுமாறு வன்னி மற்றும் யாழ்.மாவட்டத்திற்கான இணைப்பாளர் த.சிவராசா தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டத்திலிருந்து கல்முனை செல்வதற்கான வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## காணாமற் போனோர் தொடர்பாக

# 40 இற்கும் மேற்பட்ட வழக்குகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பாக 40 இற்கும் மேற்பட்ட வழக்கு விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்றத்தில நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. 1995 ஆம் ஆண்டுக்குப் பின், படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன 234 பேரின் நிலை தொடர்பாக இதுவரை எதுவித தகவல்களும் இல்லை.

இந்தநிலையில், அவர்களது உறவினர்களால் மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணி றெமிடியஸ்சும், அரசு தரப்பில் அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமியும் இராணுவத் தரப்பினர் சார்பாக சட்டத்தரணி குறுப்பும் ஆஜராகி வருகின்றனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் மட்டும் இருபத்தைந்திற்கும் அதிகமான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கு விசாரணை தொடர்பான அறிக்கை கள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாவற்குழிப் பகுதியில் வைத்து இருபத்து நான்கு பேரை கைது செய்த அதிகாரி டுமிந்த என்பவர் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென முறைப்பாட்டுக்காரர்கள் கோரி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக, நீதிமன்றம் இராணுவத்தளபதி பலகல்ல, சட்டமா அதிபர் கமல சபேசன் ஆகியோர் ஊடாக நடவடிக்கை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## செய்திக் கட்டுரை

ஆன்சிலின்



# ஒரு தியாகியின் நினைவாய்...!



கேடில்ஸ் நகர் என்ற பெயரைக் கேட்டாலே... அது எங்கே இருக்கிறது? என்ற எதிர்கேள்விதான் எல்லோரிடமும் வருகின்றது. இந்தக் கேள்வியானது அருகேயுள்ள கிராம மக்களிடமிருந்துகொண்டே வருகின்றது. அந்த அளவிற்கு அந்நியப்பட்ட இடமாகவும். யாருமே கண்டுகொள்ளாத இடமாகவும் மாறி இருக்கிறது. அருகிலுள்ள அயல் கிராமங்களான உசன், விடத்தல் பளை, கெற்பலி கிழக்கு ஆகிய இடங்கள். கேடில்ஸ் நகருக்கும் தொடர்பே இல்லாத கிராமமாகவும் இருந்து வருகின்றது.

இலங்கையில் இனக்கலவரம் விருட்சமாக விசுவரூபம் எடுத்த காலப்பகுதி 1983 ஆண்டு ஆகும். இந்தக் காலப்பகுதியில், கலவரத்தினால், சிங்களவர்களால் துரத்திவிடப்பட்டு, வீடு வாசல்களை இழந்தும், உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் எல்லோரையும் பிரிந்தும், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமலும் அகதிகளாகக் கொழும்பிலிருந்து இடம்பெயர்நது இங்கே வந்தார்கள்.

இருக்க வீடு இன்றி, உண்ண உணவுமின்றி அநாதரவாக, யாருமே கண்டுகொள்ளாதபடி நிற்கதியாய் நடுத்தெருவில் நின்றார்கள். இவர்களில் அறுபத்தைந்து குடும்பங்களைக் கைதடி அறவழி போராட்டக்குழுவும், அருட்சகோதரி மரியறோசாவும் இணைந்து தாங்கிக்கொண்டார்கள்.

நோர்வே உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன, கொடிகாமத்திலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கெற்பலி கிழக்கு ஜே/332 இலக்கம்கொண்ட பகுதியில் பெரும் முட்களும், புதர்களும் நிறைந்த பற்றைக் காடுகளாய் காட்சியளித்த பகுதியைக் குறிப்பிட்ட விலையில் கொள்வனவு செய்து குடும்பம் ஒன்றுக்கு தலா 8 பரப்புக் காணியில் விசாலமான இரண்டு அறையுடன்கூடிய பெரிய வீடும், வீட்டுக்கு ஒரு கிணறுமாய் அறுபத்தைந்து குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆனாலும், சொந்த வீட்டில் இருந்து, சகலவசதிகளுடனும், தொழிலினை மேற்கொண்டும், உறவுகளோடு ஒன்றாக இருந்தும், பகிர்ந்தளித்த அந்த நாட்களை மறக்கமுடியாமலும், சிங்களக் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டும், எரித்தும் உயிர் பிரிந்த உறவுகளின் நினைவிலும் மீள முடியாமல் வாழ்க்கையை நகர்த்தினார்கள்.

கைதடி அறவழி போராட்டக் குழுவினரினதும், அருட்சகோதரி மரியறோசாவினதும் இணையற்ற முயற்சியினால் இன்னலுக்குள்ளாகி வந்த தமிழ் மக்களின் உள்ளக்காயங்கள் அன்றைய தினத்தில் பாதிக்கப்பட்டு வந்த குடும்பங்களுக்கு ஆறுதல் அளித்தது, மறுவாழ்வினை தரும் நம்பிக்கையை தந்திருந்தது.

அன்று சோலையாய் பூத்துக் குலுங்கிய இந்தக் கிராமம் ஒரு தியாகியின் அன்பால் செதுக்கப்பட்டது. கைதடிப் பிரதேசத்திலே வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட கேடில்ஸின் நினைவாய் உருவாகிநின்ற இந்தக் கிராமம் தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தால் அழிவடைந்துபோனது - இங்கே இருந்தவர்கள் மறுபடியும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். இவர்களின் வாழ்க்கையில் துன்பதுயரங்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

சமாதான சூழலில் 'ஏ-9' நெடுஞ்சாலை திறந்ததற்குப் பின்னால் இடம்பெயர்ந்த குடும்பங்களில் பதினைந்து குடும்பங்கள் மீண்டும் இக் கேடில்ஸ் கிராமத்திற்கு திரும்பியுள்ளனர். விமானக்குண்டு வீச்சினாலும், எறிகணை வீச்சினாலும் அழிக்கப்பட்டு, இங்கே வாழ்ந்ததிற்கான எந்தவித அடையாளமும் இன்றி சுடுகாடுபோல் காட்சியளித்த இக்கிராமம். மீண்டும் புத்துயிர் பெறவேண்டும்.

இடம் பெயர்ந்து சென்று வாழ்க்கையில் சொல்லொனா துன்பங்களை அனுபவித்து மீண்டும் இந்த சமாதான சூழ்நிலையில் வாழ்வதற்காக திரும்பி வந்தவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள், மீண்டும் இக் கிராமத்தில் மக்கள் வாழவேண்டும். இதற்கு முன்நின்று உருவாக்கிய கைதடி அறவழிப் போராட்டக்குழுதான் தன் கருணைப் பார்வையை இந்தக் கிராமம்மீது திருப்பவேண்டும் அவர்கள் உதவி செய்வதற்கு முன்வருவார்கள் என நினைக்கின்றோம்.

விமானக்குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்ட அரைகுறையான கட்டடங்களுக்குள்ளும், நம்பிக்கையுடன் தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். மழை காலங்களில் வீட்டிற்குள் இருக்கமுடியாமலும், அரசினால் மீளக்குடியமர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற இருபத்தைந்தாயிரம் ரூபாவை பெறமுடியாமலும், சிக்கலுக்குள் சிக்குண்டு இருக்கும் இந்த மக்களின் அடிபபடைத் தேவைகளையாவது, பூர்த்தி செய்வார்களா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்யமுற்படாத அரசாங்கம் கண்மூடி நிற்கின்றது. தனியார் நிறுவனம், தொண்டர் அமைப்புக்களுமாவது முன்வரவேண்டும்.

கேள்விக்குறியாக இன்றுவரை வாழ்ந்துவரும் இந்தக் கிராம மக்கள் - சொல்லொனா வேதனைகளில் தொடர்ந்தும் வாழும் அவலங்கள் எப்பொழுது முடிவுக்கு வரப்போகின்றது. கண்டுகொள்ளாத அரசாங்கம் இந்த நாட்டில் இருந்து என்ன செய்யப்போகின்றது. தமிழ் மக்களுக்கு.

கைதடி அறவழி போராட்டக் குழுவுக்கு இந்த கிராமத்து மக்கள் விடுக்கும் வேண்டுகோளானது அநாதரவாய் இருக்கும் மற்றைய வீடுகளும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டும் இருக்கின்றன. இந்த வீடுகளை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகள் இன்றி வாழ்ந்து வரும் இந்தக் கிராமமக்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டு மென்பது நமது வேண்டுகோளாகும். இதன் அருகில் தரவை என்கின்ற இடத்திலுள்ள சிறிய கிராமமான பண்டிதர்குடியிருப்பும் இழப்பின் கோரத்தை வெளிக்காட்டி நிற்கின்றது.

## விமர்சன நோக்கு

காவலூர் விஜேந்திரன்

# பாரம்பரிய கலைவடிவங்களில் ஒன்றான கூத்து கலைவடிவம்





இயேசு கிறிஸ்துவின் பிறப்பைச் சித்தரிக்கும் வகையில் 'தெய்வம் மண்ணில்' என்னும் சிந்து நடைக்கூத்து, இயேசுவின் பிறப்பு விழாவான நத்தார் பண்டிகையை முன்னிட்டு பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டது. தரம்-4 தொடக்கம் தரம் - 9 வரையான மாணவர்கள் பங்குபற்றிய தெய்வம் மண்ணில் என்ற சிந்து நடைக்கூத்து, கூத்துக்கலைக்குரிய விழுமியங்களை உள்ளடக்கியதாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாரம்பரிய கலை வடிவங்களில் கூத்துக்கள் முதன்மையானவை. அதிலும் அனைவரையும் ஆட வைக்கும் சிந்து நடைக்கூத்தானது சிறுவர் முதல் பெரியோர்கள் வரை விரும்பி ரசிக்கும் ஒரு நிகழ்வு. பாரம்பரிய கலைவடிவங்கள் அண்மைக் காலங்களில் போட்டி நிகழ்வாகவும், காட்சி நிகழ்வுகளாகவும் இடம் பெற்றுவருகின்றமை கலைகள் மீது எமக்குள்ள பற்றுதியைப் பறைசாற்றுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் மரபு வழிக் கதைவடிவங்களாக ஆடப்பட்டு வரும் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தின் பாணியில் தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக் கூத்து ஆடப்பட்டமை சிறப்பானது.

தெய்வம் மண்ணில் என்ற கூத்திற்கான கதையை யாழ் - ராதவள்ளி எழுதியுள்ளார். இக்கதைக்கு உயிர் வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்தவர், இசைக் கலைஞர் வே.தூயகுமார், இவ் இருவரது முயற்சியின் வெளிப்பாட்டிற்கு சங்கீத ஆசிரியை திருமதி-தூயகுமார் நிறைவாக பங்களிப்பு வழங்கியுள்ளார் என்பது, நாட்டுக் கூத்தைப் பார்த்தவர்களிற்குப் புரியும்.

நல்லூர்- சென்.ஜேம்ஸ் ஆலய மண்டபத்தில் முதல்முறையாக இடம்பெற்ற இக் கூத்தானது அரைமணித்தியாலத்தைக் கொண்டது. காப்பு பாடலுடன் ஆரம்பமான இந்தக் கூத்தில், கட்டியக்காரன் வரவில் ஏரோது மன்னனுடைய சிறப்புக்களை குறிப்பதான பாடல்கள் இடம்பெறுகின்றன. ஏரோது மன்னன் வரவில் தனது ஆணை, அதிகாரங்களைச் சொல்லும் வகையில் பாடல் அமைகிறது.

இவ்வாறு செல்லும் கதை நகர்வில், மரியாளிற்கும் - தேவதூதனிற்கும் இடையே உரையாடல், (மரியாளிற்கு மங்கள வார்த்தை உரைத்தல்) மரியாளுக்கும் - சூசைக்கும் திருமணம் நிச்சயக்கப்படுகிறது. மரியாள் திருமணத்திற்குமுன் கருவுற்றநிலை கண்டு, சூசை மனவேதனை அடைதல், தேவதூதன் ஆறுதல் கூறுதல், இவ்வாறு கூத்து தொடர்கிறது.

சிந்து நடைப்பாணியின் தன்மையை மீறாது அதன் தனித்துவங்களிற்கு அமைவாக மிக நேர்த்தியாகப் பார்வையாளர்களை கதையுடன் ஒன்றிக்கும் வகையில், மிகச் சிறப்பாக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. அரங்க அமைப்பு, வேடஉடை, ஒப்பனை இவை பாரம்பரிய கூத்துக் கலைவடிவங்களாக இடம்பெற்றமை சிறப்பிற்குரியது, சிறுவர்கள் என்ற பக்குவத்தை பொய்ப்பிக்கும் வகையில், கூத்து நெறிமுறைகளிற்கு அமைவாக, தமது முழு உழைப்பையும் வழங்கிய ஒவ்வொரு கலைஞர்களும் பாராட்டிற்குரியவ்ர்கள.

ஏரோது மன்னனாக பாத்திரமேற்ற தரம்-9 இல் கல்விபயிலும் மாணவி அரசனிற்குரிய கம்பீரமான தோற்றத்தில் தோன்றி, பாத்திரமாக வலம் வந்தமை பாராட்டிற்குரியது. சூசை, மரியாள், இவர்களது பாத்திரமேற்றவர்களும் அவர்களிற்குரியதான எளிமை, அன்பு, கருணை என இவற்றை வெளிப்படுத்தும் வகையில் மிகச்சிறப்பாக பங்களிப்பு வழங்கியமை பாராட்டிற்குரியது.

ஏரோது மன்னன் குடிசன மதிப்பை மேற்கொள்ளுவதற்கு யூதேயா, கலிலேயா, போன்ற இடங்களிலுள்ளவர்களை தமது நாடுகளுக்குச் செல்லுமாறு உத்தரவிடுகின்றான். இதனால், மரியாளும்- சூசையும் தமது ஊரிற்குச் செல்கின்றார்கள். இவர்கள் பெத்தலேகேம் நகரிற்குச் செல்கையில் பெத்லேகேம் நகரிலுள்ள மாட்டுத் தொழுவத்தில் இயேசு கிறீஸ்துநாதர் பிறக்கிறார். இதனை கேள்வியுற்று, வால் வெள்ளிகளின் உதவியுடன் அங்கு வந்த ஞானிகள், மீட்பர் பிறந்துள்ளார் என அவரை வணங்கி, வாழ்த்துகிறார்கள், இச் செய்தி ஏரோது மன்னனிற்குத் தெரியவருகிறது.

இவ்வாறு இயேசு கிறீஸ்து பிறந்த நிகழ்வையும் அதற்குமுன் இடம்பெற்ற சம்பவங்களையும் இறைவார்த்தைகள் மூலம் வெளிப்படுத்திய 'தெய்வ மண்ணில்' என்ற சிந்துநடைக் கூத்தானது யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மண்டபத்திலும், யாழ் பிரதேச செயலகத்திலும் இடம் பெற்றமை இக் கலைவடிவத்திற்கு கட்டியம் கூறுபவையாக அமைந்தன.

இளம் படைப்பாளிகளின் தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக் கூத்தானது தொலைக் காட்சி மோகமுள்ள இன்றைய காலத்தில் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது. இக்கூத்தானது சாவகச்சேரிப் பகுதியிலும் இடம் பெறவுள்ளமை இப்படைப்பிற்கு மேலும் ஓர் நிறைவை வழங்கியுள்ளது. இவ்வாறான படைப்புக்கள் இனிவரும் காலங்களிலும் வித்தியாசமான கோணங்களில் வெளிவரவேண்டும் என்பது பார்வையாளர்களது பேரவா. ❖

# கம்போடிய தலைநகர் நொம்பென்னில் தொழிற்சங்கத் தலைவர் சுட்டுக்கொலை!



கம்போடியாவில் முன்னணியில் உள்ள தொழிற்சங்கத்தலைவராக 'சியா விசியா' தலைநகர் 'நொம்பென்' னில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

கம்போடியாவின் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து செயல்பட்டுவந்த இவர் கம்போடியாவின் தொழிலாளர் சுதந்திர வர்த்தக சங்கத்தின் தலைவராகவும் கடமைபுரிந்து வந்தவர்.

கொலைகளின் பின்னணி தெரியாவிட்டாலும் இது அரசியல் படுகொலை எனச் சந்தேகிக்கப்படுகிறது. கம்போடியாவின் எதிர்க்கட்சியான சாம் ரெயின்சி கட்சியில் அங்கம் வகித்த மூவர் அண்மைக்காலத்தில் கொல்லப்பட்டுள்ளார்கள்.

சியாவின் திடீர்மரணம் நாட்டிற்கும், தொழிலாளருக்கும் பாரிய இழப்பு என பி.பி.சியின் 'கைலி மொறிஷ்' தெரிவித்தார். அண்மையில் கம்போடியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களை அடுத்து, தொழிற்சங்கத் தலைவரான சியா, தொடர்ந்தும் தொலைபேசியூடாக பயமுறுத்தப்பட்டு வந்துள்ளார் என்று எதிர்க்கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனால், புதிய அரசொன்றை கம்போடியாவில் அமைப்பதற்கான சமரசப் பேச்சுவார்த்தைகளில் தேக்கநிலை ஏற்படலாமெனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

# லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் இஸ்ரேல் பிரதமர் ஷரோன்

## பதவி விலகக் கோரும் மக்கள்

வர்த்தகர் ஒருவரிடம் இருந்து பல மில்லியன்கள் பணத்தை லஞ்சமாகப் பெற்ற விவகாரம் தொடர்பாக, தற்போது இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.



இதனால், பிரதமருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஷரோனுடன், உதவிப் பிரதமர் மற்றும் பிரதமரின் மகன் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சென்ற வருடம் இது தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, தான் லஞ்சம் எதுவும் பெறவில்லையெனத் தெரிவித்திருந்தார்.

இதுவரை பிரதமருக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனால், நீதியமைச்சு பிரதமருக்கு எதிரான குற்றங்களை நன்கு ஆராய்ந்த பின்னர், சில வாரங்களில் அல்லது சில மாதங்களுக்குள் சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், நீதி அமைச்சினால் எடுக்கப்படவுள்ள தீர்மானங்களில் ஷரோனின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படவுள்ளதாகச் செய்தியாளர்கள் தெரிவித்தார்கள்.

பிரதமர் ஷரோன் மேற்குறிப்பிட்ட தவறைச் செய்திருக்கலாமெனவும், பதவியிலிருந்து அவர் விலகவேண்டுமெனவும், இஸ்ரேல் மக்கள் தொகையின் அரைப்பங்கினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சியினரும் பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கருத்தினையே வலியுறுத்திவருகின்றனர்.

# இரண்டு அமெரிக்கப் படையினர் மோட்டார்த் தாக்குதலுக்குப் பலி!

## ஈராக் பெண்களும் கொல்லப்பட்டனர்

ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் கூட்டுப் படைகளுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களின் தொடர்ச்சியாக நேற்று நடந்த சம்பவங்களில் அமெரிக்க இராணுவ வீரர்கள் உட்பட சில ஈராக்கியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

'பாகுவா' நகரில் இடம்பெற்ற மோட்டார் தாக்குதல் சம்பவத்தில் இரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் பலத்த காயங்களுக்கும் உட்பட்டார்.



பிறிதொரு தாக்குதல் சம்பவத்தின்போது, ஸ்பானிஷ் இராணுவப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார். பக்தாத்தின் தெண்பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சந்தேகத்துக்கிடமான தீவிரவாதி ஒருவரின் வீட்டினை முற்றுகையிட்டுச் சோதனை மேற்கொள்ள முற்பட்டபோதே, அதிகாரி காயமடைந்தார். இந்தப் பிரதேசத்தில் 1300 ஸ்பானியத் துருப்பினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேநாளில், தலைநகர் பக்தாத்திலிருந்து 32 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள 'பலுஜா' நகரில் மினிபஸ்சில் பயணம் மேற்கொண்ட ஈராக்கியப் பெண்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர். இந்தப் பெண்கள் பாக்தாத்தில் அமைத்துள்ள அமெரிக்க தளம் ஒன்றில் துப்பரவுப்பணி மற்றும் சலவைத் தொழிலில் ஈடுபட்டுவந்தனர்.

# அணுகுண்டு தயாரிக்கும் புளூட்டோனியம் வடகொரியர்களிடம் கைவசம் உள்ளது!


வடகொரியாவின் மாநிலமான பொயோங்யாங்கில் அணுகுண்டு தயாரிக்கப்படுகிறது என்ற கருத்தை உறுதிப்படுத்துவதற்கான சாத்தியங்கள் எவையும் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், வட கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பிய அமெரிக்காவின் அணு விஞ்ஞானிகளே இதனைத் தெரிவித்துள்ளனர்.

உலக நோக்கு

எனினும், அமெரிக்காவின் புகழ்பெற்ற அணு விஞ்ஞானியான 'சையிக் பிரைட் கொக்கர் - கருத்துத் தெரிவிக்கும்போது, அணுகுண்டு தயாரிக்கும் தரமிக்க புளூட்டோனித்தை தமக்கு காண்பித்ததாகவும், இதன் மூலம் வடகொரியா அணுகுண்டு தயாரிக்க முயற்சி செய்யமாட்டாது என கருதக்கூடாதெனவும் தெரிவித்தார்.

மேலும், ஜொங்பொயோனில் ரகசியமாக அமைக்கப்பட்டுள்ள அணுசக்தி உலையைப் பார்வையிடுவதற்கு வடகொரியர்கள் தன்னை அழைதுச் சென்றதாகவும், ஓராண்டிற்கு முன்னர் சர்வதேச காண்காணிப்பில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த அணுசக்தி உற்பத்திக்கான பாளங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்ததை அவதானித்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இதனிடையே, யுத்த தந்திரங்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தும் ஸ்தாபனம் வட கொரியாவுடன் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மேலும், கூடுதலான அணு ஆயுதங்களை உற்பத்திக்கு வழிவகுக்கலாமெனத் தெரிவித்துள்ளது.

# இந்திய குடியரசுத் தினத்தன்று தாக்குதல் நடத்தலாம் என அச்சம்

பின்லேடன் தலைமையிலான அல்கெய்டா தீவிரவாதிகள் விமானங்களை கடத்தி மீண்டும் ஒரு பெரிய தாக்குதலுக்கு தயாராகி வருவதாக சமீபத்தில் அமெரிக்கா எச்சரித்தது. குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து அமெரிக்கா வரும் விமானங்களை தீவிரவாதிகள் கடத்தலாம் என்று கூறப்பட்டது.

இதனால், புத்தாண்டு கொண்டாட்ட சமயத்தில் சில நாடுகள் அமெரிக்காவுக்கு இயக்கும் விமானங்களை ரத்துசெய்தன. இந்த நிலையில், இந்தியாவில் இருந்து புறப்படும் சர்வதேச விமானங்களை தீவிரவாதிகள் கடத்தி நாசவேலைகளில் ஈடுபடகூடும் என்று, அமெரிக்கா இரகசிய தகவல் கொடுத்து எச்சரித்துள்ளது.

புதுடெல்கியில் வரும் 26ஆம் திகதி நடக்கும் குடியரசு தின விழாவின் போது பிரமாண்ட கண்கவர் அணிவகுப்பு நடைபெறும். அதை சீர்குலைக்க தீவிரவாதிகள் விமானத்தை கடத்தலாம் என்று புலனாய்வு பிரிவினரும் எச்சரித்துள்ளனர்.

இந்தத் தகவலை மத்திய விமானத்துறை இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் அனுப்பி, விழிப்புடன் இருக்கும்படி உஷார்படுத்தி உள்ளது. டெல்கி, மும்பை, சென்னை, கொல்கத்தா உட்பட பல முக்கிய விமானநிலையங்களின் பாதுகாப்பு, மத்திய தொழில் பாதுகாப்பு படைவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் அச்சுறுத்தல் குறித்து, தங்களுக்கு தகவல் வந்திருப்பதை ஒத்துக்கொண்ட மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்து இருப்பதாக கூறினார்கள். குறிப்பாக, சர்வதேச விமானங்களுக்கு வரும் பயணிகளை தீவிரமாக கண்காணிக்கத் தொடங்கி உள்ளனர்.

விமான நிலையத்தின் அனைத்து பகுதிகளையும் மத்தியதொழில் பாதுகாப்பு படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். விமான ஓடுபாதை, பயணிகள் சோதனை நடக்கும் இடங்களில் கூடுதல் ரோந்து பணிக்கும், கண்காணிப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நன்கு குறிபார்த்துச் சுடும் கொமாணடோ படைவீரர்கள் சர்வதேச விமான நிலையத்துக்குள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினால் பயணிகளை பாதுகாக்க முன்ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக விமான நிலையங்களுக்குள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை பார்வையாளர்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் முதல் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு வரும் அனைத்து பயணிக்கும் எக்ஸ்ரே கருவிகள் மூலம் முழுமையாக பரிசோதிக்கப்படுகின்றனர். பயணிகளின் பொதிகள் முழுமையாக பரிசோதிக்கப்பட்ட பிறகே விமானத்துக்குள் ஏற்றப்படுகின்றது.

## ஊர்சுற்றி எழுதுவது

"மொழி அடிப்படையில் அல்லது மத அடிப்படையில் இலங்கையைப் பிரித்து வேறாக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் ஒதுக்குவது, சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பது என்று விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் நியாயமான நிபந்தனைகளுடன் பேச்சு நடத்துவது

நண்பர் இப்படிப் பத்திரிகைச் செய்தியை வாசித்துக் கொண்டு போனார்.

எதிர்வீட்டுக்காரர் குறுக்கே விழுந்து "என்ன, புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் நியாயமான நிபந்தனைகளுடன் பேசுவதாமோ? என்றார்.

"அப்ப இதுவரை நடந்த சமாதானப் பேச்சுவாரத்தைகள் எல்லாம் என்ன கண்ணாமூச்சி விளையாட்டோ? "என்றார் நண்பர்.

எங்கட நாட்டு இனப்பிரச்சனை வல்லரசுகளுக்கும்,பிராந்திய வல்லரசுகளுக்கும் கண்ணா மூச்சி விளையாட்டாய்த் தானிருக்குது என்று சலிப்புடன் சொன்னார் எதிர்வீட்டுகாரர்.

அம்மாவின் கட்சியும், அம்மாவின் புருஷனை கொலைசெய்த கட்சியும் இணைந்து ஒப்பந்தம் செய்தபோது வெளியிட்ட சில விதிகளைத்தான் நான் பத்திரிகையிலிருந்து படிச்சனான். என்று விளக்கம் சொன்னார் நண்பர்.

"அது சரி மொழி அடிப்படையிலோ, மத அடிப்படையிலோ பிரிவினை கோரக் கூடாது என்கிறார்கள்.

இலங்கையின் குடியரசு அரசியலமைப்பில் சிங்களம் தான் நாட்டின் உத்தியோக மொழி, பௌத்தம்தான் நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மதம்: இந்த இரண்டுமே இதரமொழிகளிலிருந்தும் மதங்களிலிருந்தும் வேறுபடுத்தப்பட்டுத் தானே இருக்கின்றன, என்று கேட்டார் எதிர் வீட்டுக்காரர்!

"அது அரசியலமைப்பின்படி வழங்கப்பட்ட அதிகாரம், வேறு எவரும் மொழி ரீதியிலோ, மதரீதியிலோ அங்கீகாரம் கேட்கக்கூடாது என்பதுதான் இதன் அர்த்தம் என்றார் நண்பர்.

"சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பது என்று இரு தரப்பினரும் சொல்கிறார்கள். அப்ப இதுவரை, இந்த மக்களுக்கு பாதுகாப்பில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் தானே என்றார் எதிர்வீட்டுக்காரர்.

சிங்கள மக்களின் உரிமைகளுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்கிறார்கள். சிங்கள் மொழிக்கும் பௌத்தத்துக்கும் அரசியலமைப்பிலேயே வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு எந்த சிங்கள மக்களுக்காக, ஆயுதப்படைகளிலும், அரசாங்க சேவையிலும் நீதி, நிர்வாகத்துறையிலும் நியமனம் பெற்றுள்ளவர்கள் சிங்கள மொழிக்கும், பௌத்தத்துக்கும் பாதுகாப்பு வழங்க எதுவுமே செய்யவில்லை என்ற கேள்வி எழுகிறதே என்றார் நண்பர்.

"அதிருக்கட்டும், விடுதலைப்புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் நியாயமான நிபந்தனைகளுடன் பேச்சு நடத்துவது என்றும், இந்த ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் சொல்லியிருக்கிறார்களே - எதிர்வீட்டுக்காரர்.

இன்னும் சிலர் மேசையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் முன்பு பேசிப்பேசி முடிவு காணவில்லை. இனியும் அவர்களுடன் பேசிக்காலம் கடத்த வேண்டுமா? - நண்பர் கேட்டார்.

இதுக்காகத்தானே சமாதானப் பேச்சு ஒரு உறுதியான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் போது அம்மா தனது அதிகாரத்தை பாவித்து மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பெடுத்தா? இது தெரியாதா? என்றார் எதிர்விட்டுக்காரர்.

அது சரி அந்தப் பேச்சுக்களை எல்லாம் குப்பையில் போட்டுவிட்டு மீண்டும் புதிதாகப் பேசுவதற்கும் கூப்பிட்டால் புலிகள் பேசுவதற்குத் தயாரோ - நண்பர் கேட்டார்.

"பேசிப்பேசியே
காலம்தள்ளிய - உன்
தலைவர்களை நம்பியே-நீ
மோசம் போனாய் என்று கவிஞர் கணபதி கணேசன் தமது "குருதிபூத்த வெள்ளரசு என்ற கவிதைத் தொகுதியில் ஒரு கவிதையின் தொடக்கத்தில் சொல்லுகிறார்.

பின்னர் தொடர்ந்து,
"என்ன செய்யப்
போகிறாய் நீ-?
துப்பாக்கியைத்தூக்கப்
போகிறாயா தூக்கு!
என்று பாடுகிறார்!

இதுதான் இனிப்புதிய பேச்சுவார்த்தையா, அல்லது நியாயமான நிபந்தனைகளுக்குப் பதிலா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியல் நெருக்கடி தீர்ந்த பின்பே உதவி நிதியை வழங்க முடியும்!




"என்ன மணியம் கூட்டணி உடன்பாடு கையெழுத்திட்ட சூடு இன்னமும் ஆறவில்லை... அதுக்குள்ள கண்டபடி அறிக்கைவிட்டு அச்சுறுத்த வெளிக்கிட்டினம் பார்த்தியே...!"

"ஓம் கனகண்ணை சமாதான முயற்சியை அரசு மேற்கொண்ட முறையில் தொடரமாட்டினமாம், நோர்வேயின் பங்களிப்பு தேவையில்லையாம்... இனி நிபந்தனையுடன் தான் பேச்சுவார்த்தையாம்... இன்னும் என்னென்னமோ சொல்லினமெல்லே...".

"கூட்டு சேர்ந்தவுடனேயே இந்தக்குதி குதிக்கினமென்றால்... தப்பித்தவறி ஆட்சிபீடம் ஏறினால் என்ன ஆட்டம் ஆடுவினமோ... ஆனா மணியம் மாப்புளிக்கிறது அப்பத்துக்கு நல்லது தான் என்பது போலை... இவை புளிச்சல் கதைகள் எங்களுக்கு நல்லது தான்... இவையின்ரை கதையை வைச்சே இவை ஆர் என்றதை உலகம் விளங்கிக்கொள்ளட்டும்..."

நானும் அப்பிடித்தான் நினைச்சன்... ஏற்கனவே ஜனாதிபதி அம்மணியின் அதிரடி நடவடிக்கைகள் சர்வதேசத்திற்கு சந்தோஷம் தருவதாக இல்லை... அதோட அகாஷியும் அதுதான் அந்த ஜப்பான்காரரும் இனி மேலும் இந்த அரசியல் போட்டியை சகித்துக்கொள்ள முடியாது என்று கொஞ்சம் சூடாத்தான் சொல்லியிருக்கிறார்... தெரியுமே..."

"அதுவும் அப்படியே... என்னமோ... புருவருசம் நாட்டுக்கு என்ன பலனைச் செய்யப்போகுதென்று பார்ப்பம்..."

"இப்ப பிடிச்சிருக்கிற கிரகம்.... மங்குசனியோ... மரணசனியோ கொஞ்சக்காலத்திலை தெரியத்தான் போகுது..."

தெருவோடி

## மனோ - மலிக்...

மிக நீண்ட விடுமுறைக்கு பின் நடைபெறாமல் இருந்த பேச்சுவார்த்தை, நேற்று முன்தினம் நடைபெற ஏற்பாடாகியிருந்த போதும், திடீரென இது ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா, மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும இடையே ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்த்து, குறுகிய காலத்திற்குள் ஒரு பொது இணக்கப்பாடொன்றை இரு தலைவர்களுக்குமிடையில் ஏற்படுத்த அமைக்கப்பட்டதே இந்தக்குழுவாகும்.

இருந்தும் பல தடவைகள் மனோ - மலிக் குழுவினர் சந்தித்துப் பேசிய போதும், இதுவரை காலமும் எந்த முடிவும் எடுக்கப் படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைகளுக்கு...

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே பெப்ரவரி 9 ஆம் திகதி மாகாண சபைகளைக் கலைக்க முடிவுசெய்யப்பட்டது. இரண்டு மாதங்களின் பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா, ஐக்கிய தேசிய முன்னணியுடன் சில விடயங்கள் குறித்து-முதல் முறையாக இணக்கத்தை எட்டியதாக ஐ.தே.மு. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் அடுத்த தினத்தில், அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களையும் நடத்துவது என்று இந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

மாகாணசபை சட்டத்தில் சில திருத்தங்களை செய்வதற்கான பிரேரணையை, எதிர்வரும் பெப்ரவரி 3ஆம்திகதி நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரவும் முடிவாகியது.

அத்துடன், மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்கான இறுதித் திகதியை, நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிப்பதென ஜனாதிபதி சந்திரிகா அமைச்சரவையுடன் ஏகமானதாக தீர்மானித்தார்.

பெரும்பாலும் ஏப்ரல் 28ஆம் திகதி மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று விடய மறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், இந்தக் கூட்டத்தில் அடுத்த நாடாளுமன்ற தேர்தலை புதிய தேர்தல் முறையின் கீழ் நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டதாக தெரியவருகிறது.

## கதிர்காமரிடம் அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்ட பின்னரே, ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியினை வழங்கமுடியும் என ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரை நேற்று முன்தினம் சந்தித்த அகாஷி இந்தத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது-

இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளில் ஜே.வி.பி ஒரு மூன்றாம் நிலைக்கட்சியாகவே உள்ளது. எனவே இந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிக்கு கூட்டணி தடையாக இருக்கக் கூடாது என - லக்ஸ்மன் கதிர்காமரிடம் கோரிக்கை விடுத்தார்.

சுதந்திரக்கட்சியும் - ஜே.வி. பியும், அரசும் - விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடனபடிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. உடன்படிக்கைப்படி நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தக் கூட்டணியை அமைத்துள்ளோமென லக்ஸ்மன் கதிரகாமர் அகாஷியிடம் தெரிவித்தார். (01)

## த.வி.கூட்டணியின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் காங்கேசன்துறை தொகுதிக் கிளையின் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு தெல்லிப் பளை காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையிலுள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டணியின் தொகுதிக் கிளைத் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில், இன்றைய அரசியல் நிலை, மீளக்குடியமர்வு தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா, ந.ரவிராஜ் ஆகியோரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி கூட்டணி சமாதான முயற்சியைப் பாதிக்கும்!

### கூட்டமைப்பு எம்.பி ரவிராஜ்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டமைப்பின் மூலம் சமாதான சூழ்நிலை அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தேசிய வருமானத்திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுயதாவது,

ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அமைதி சூழ்நிலை காரணமாக வடபகுதியிலும், தென்பகுதியிலும் வாழும் மக்களுக்கு பல்வேறு வரப்பிரசாதங்கள் கிடைத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலே செய்து கொள்ளப்பட்ட கூட்டமைப்பின் மூலம் சமாதான சூழ்நிலை அற்றுப்போக முயற்சிப்பதாகவும், இத்தகைய நோக்கத்தை முறியடிப்பது அவசியமாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் காரணமாக நாட்டில் அமைதி ஏற்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கை காரணமாக பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினத்தன்று நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் நடத்துவதற்கு ஏதுவான சுதந்திரமும், சமாதானத்துக்கான சூழ்நிலையும் நிலவியது எனவும் தெரிவித்தார்.

## வவுனியா - தேசிய

செந்தில்நாதன் சுதர்சினி (கந்தர்மடம்), கனகசிங்கம் மலைமகள் (கொழும்பு), ரட்ணசாமி கமலேஸ்வரி (கொடிகாமம்), கிருஷாந்தி தவராஜா (உடுப்பிட்டி), மேகனா இராஜநாயகம் (வவுனியா), றபீக் ஹொமட் ரமேஸ் (குருநாகல்) கார்த்திகா மனோகரன் (வவுனியா), ஸ்கந்தராஜா பாலஜீவன் (வட்டுக்கோட்டை), பிரகாசமூர்த்தி வல்லேஸ்வரி (கல்லாறு), நிரேசா சிவலோகநாதன் (ஒட்டுசுட்டான்), ஞானோதயன் ராஜோதயன் (கோப்பாய்), அப்துல் மஜீத் நதியா (புத்தளம்) கேனுகா வரதராஜா (வட்டுக்கோட்டை), யோகராஜா சயநீதன் (நெடுந்தீவு), சின்னத்துரை றோசினி (யாழ்ப்பாணம்) சியாமினி கருணாநிதி (நீர்வேலி.)

(முற்றும்)

## தென்னிலங்கை அரசியல்...

யுடன் நாம் பேசத்தயாராக இருக்கின்றோம். ஆனால், சந்திரிகா அம்மையாரது நிலைப்பாடு எப்படி அமையுமென்பதை நாம் இப்பொழுது எதிர்வு கூற முடியாது.

அத்துடன், யுத்தத்தை நாம் வலிந்து மேற்கொள்ளப்போவதில்லை. எமது தலைவரும், பல இராஜதந்திரிகளைச் சந்திக்கும் பொழுதும், மிகத்தெளிவாக வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். நிலைமைகளைக்குழப்பி, யுத்தத்தை எம்மீது திணிக்கின்றபோது, நாங்கள் அதனை எதிர்கொண்டு எமது மக்களையும், தேசத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு, உள்ளதனால் அதில் நாம் உறுதியாக இருப்போம்.

கொழும்பில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாட்டில் நாம் கலந்து கொள்ளாததற்கு காரணம் - இரண்டு தரப்பினரையும் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து, அதற்கூடாக நிதியுதவி வழங்குவதுதான் தொடர்ச்சியாக உள்ளது.

இரு தரப்பும், இணக்கப்பாட்டிற்கு வராதநிலையில் யாரிடம் அதிகாரம் உள்ளது, யாருடன் நாம் பேசுவது என்ற தெளிவான நிலைமை தெரியாமல் இவ்வாறான மாநாட்டில் கலந்து கொள்வது எமது மக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துவதோடு, சர்வதேசத்தின் மத்தியில்கூட தெளிவான செய்தியைக் கொடுப்பதற்குத்தடையாக இருக்கும்.

அந்தவகையில் நாம் எமது நிலைப்பாட்டில் சொல்லியிருக்கின்றோம்.

எனவே, சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் இணைத்து முன்னெடுக்கப்படுகின்ற எந்த நடவடிக்கைகளையும் செய்யக்கூடிய சூழல் ஏற்படும்.

இன்றைய சந்திப்பில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இன்றைய நிலைமைகளை அதாவது, சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை, நெருக்கடி நிலைகள் சம்பந்தமாக எங்களுடைய தலைமைப் பீடத்தின் கரிசனையை முன்வைத்ததுதான், முக்கியமாகப் பேசப்பட்ட விடயமாகும். உடன்பாடுகாணும் பேச்சுக்களாக இது அமையவில்லை. ஏனென்றால் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு பாரிய நெருககடியான நிலையிலும், அவர்களை அவர்களாலும் எந்த இணக்கப்பாட்டிற்கு வரக்கூடிய நிலையில் அவர்களும் இல்லை. இருதரப்பும் கருத்துக்களையே பரிமாறினோம்.

மக்கள், சமாதான முயற்சிகளில் நம்பிக்கையிழந்து, பொறுமையிழந்து வருகின்றார்கள், இந்தச் சமாதான முயற்சியில் மக்களை மிகவும் ஈடுபாட்டோடு வைத்திருக்க, வேண்டுமாக இருந்தால், மக்களுக்கான அவசர, மனிதாபிமான உதவிகளை மிகவும் அவசரமாகச் செய்யவேண்டும். அதற்கு நீங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அகாஷிக்கு நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இலங்கைக்கான உதவிகள் சமாதான முயற்சிகளின் வெற்றியிலும், போக்கிலுமே தங்கியுள்ளதென சர்வதேச சமூகம் தனது நிலைப்பாடாக எடுத்துள்ளது. அதில், சர்வதேச சமூகம் மிகவும் உறுதியுடன் இருக்க வேண்டுமென்பதனை நாம் மீண்டும், மீண்டும் வலியுறுத்தினோம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மக்களுடைய அபிலாஷைகளையோ, அவர்களது விருப்பங்களையோ, அவர்களது தீர்மானங்களை எடுப்பதிலோ அதனுடைய தீர்மானங்களை எடுப்பதில், அதனடிப்படையில் அந்தக்காலத்திற்குத் தேவையான நேரம், சரியான தீர்க்கமான முடிவுகளை எங்களுடைய தலைமை எடுக்குமென்றுதான் நான் நினைக்கின்றேன் எனக்குறிப்பிட்டார்.

## இலங்கையில் நிலவும் அரசியல்...

தகவல் வெளியிட்டார்.

இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. ஏற்கனவே நாட்டின் பாதுகாப்பை சரியான முறையில் அவதானிக்கத் தவறிவிட்டதாக ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மீது குற்றம் சாட்டியிருந்ததால், இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால், தேர்தலில் பெரும் பிரசாரமாகப் பயன்படுத்தக் கூடும் என்று அவர் அச்சமடைந்திருக்கிறார்.

ஆனால், இந்திய அரசாங்கம் ஜனாதிபதி சந்திரிகாவினது திட்டப்படியோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் திட்டப்படியோ, இந்த உடன்பாட்டில் கைச்சாத்திடுவதை விரும்பவில்லை என்றும், இருதரப்பும் இணைந்து எடுக்கும் முடிவின் படியே உடன்பாட்டை செய்துகொள்ள விரும்புவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மேலும், இந்த உடன்பாட்டு இலங்கையுடன் செய்யப்படுவதாக இருக்கின்றதேயன்றி, எந்தவொரு கடசிக்காகவும் செய்யப்படவில்லை என்று இந்தியா கருதுகின்றது. இதனால், உடனடியாக அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கும் நிலையில் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்த உடன்படிக்கை குறித்து தகவல் வெளியிட்ட புதுடெல்கியிலுள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், இந்த உடன்பாட்டில் பெரிய விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை. மூன்று அல்லது நான்கு பக்கங்களில் அடங்கும் இந்த உடன்பாட்டில் இலங்கைக்கு வழங்கப்படக்கூடிய இராணுவ ரீதியிலான உதவிகள் பற்றியே அதிகமாக குறிபபிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் இலங்கைப்படையினருக்கு பயிற்சியளித்தல், பாதுகாப்பு தொழில்நுட்பத்தினை தரம்உயர்த்துதல், கனரக இராணுவத் தளபாடங்களை குத்தகைக்கு வழங்குதல் அல்லது விற்பனை செய்தல், புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், கடலில் கூட்டு ரோந்து ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

படைகளை இலங்கைக்கு அனுப்புவது குறித்த அம்சங்கள் எதுவும் உடன்பாட்டில் உள்ளடக்கப்படவில்லை. 1987 இல் இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பியது போன்ற சம்பவம் ஒன்று மீண்டும் நடப்பதை இந்தியா விரும்பவில்லை.

1987 இல் செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை போல், இது அமையமாட்டாது. அந்த உடன்பாட்டில் தமிழர் பிரச்சினைகள் குறித்தே பெரும்பாலும் குறிப்பிடப் பட்டிருந்தது.

அதில் பாதுகாப்பு விடயங்கள் இணைக்கப்படவில்லை. ஆனால், தற்போது செய்து கொள்ளப்படவுள்ள இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கையில், தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து எந்த விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை.

இதன்மூலம் இந்தியா படையை அனுப்புவதைத்தவிர, ஏனைய அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்கும் என்ற செய்தி புலிகளுக்கு சொல்லப்படும்.

வெளிநாட்டு உதவியைக் கோருமளவுக்குப் புலிகள் பாரிய போர் ஒன்றை ஆரம்பிக்கக் கூடிய சூழலைத் தவிர்ந்த நிலையில், இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுபபுவதில்லை என்று இந்த உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

அடிப்படையில் இதுவொரு அரசியல் சார்ந்ததொரு ஆவணம்தான்.

புலிகளிடமிருந்து பயமுறுத்தல் ஏற்படும் போது, அதை எதிர்கொள்வதற்காக சர்வதேச பாதுகாப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்ளவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் ப டவுள்ளது.

இதேவேளை, இந்தியாவின் சொந்தப்பாதுகாப்புக்கும் இலங்கை அவசியமாதொன்றாக இருக்கிறது. ஏனெனில் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் இந்த இடத்தை ஒரு விளையாட்டு மைதானமாகப்பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இலங்கையில் நிலவும் பாதுகாப்புக் குறைபாட்டை நிரப்புவதற்கு - எதிரான சக்திகள் எதுவும் நிரப்பிவிட எத்தனிக்கலாம் என்று இந்தியா கருதுகின்றது.

தற்போது இலங்கைக்கு வழங்கப்படும் இராணுவ உதவிகளும், புதிய உடன்பாடும், இலங்கை விவகாரத்தில் இந்தியா கொண்டிருக்கும் நாட்டத்தைக் காட்டுவதாகவும் இந்துஸ்தான் ரைம்ஸ் மேலும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

New Stock Now Available

மிக மிக மலிவு விலையில்

Dell, Compaq கணனிகள் PII, PIII தரத்தில் உங்கள் பணத்திற்கு மிகப்பெறுமதியுடன்

ரூ 15000/- லிருந்து

ரூ 15000/- லிருந்து

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution

73, Palaly Road, Kantharmadam. Jaffna. T.P:2222674



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.